பராபவ ௵ ஆனி ௴
ஜூன் - ஜூலை 2026

மலர்: 9
இதழ்: 3

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





**MONTHLY NEWSLETTER FROM:**

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com



ஸ்ரீ:



ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ விஜயவல்லீ ஸமேத ஸ்ரீ ஹேதிராஜ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ப்ரதிபடஶ்ரேணீபீஷண வரகுணஸ்தோம பூஷண
ஜநிபயஸ்தாந தாரண ஜகதவஸ்தான காரண ।
நிகில துஷ்கர்மகர்ஶந நிகமஸத்தர்மதர்ஶந
ஜய ஜய ஸ்ரீ ஸுதர்ஶந ஜய ஜய ஸ்ரீ ஸுதர்ஶந॥ – ஸ்ரீஸுதர்ஶநாஷ்டகம்

# ஸ்ரீ ஸுதர்ஶன மஹாயஜ்ஞ பத்ரிகை

ஶ்ரிய: பதியான ஸ்ரீமந் நாராயணனே ''அஹமேவ–வேத்ய:'' என்கிறபடி மாடமாமயிலை ஸ்ரீவேதாந்த தேஶிகன் ஸந்நிதியில் எழுந்தருளி பக்த ஸம்ரக்ஷணம் செய்து வருகிறான். பரமகாருணிகனான ஸ்ரீ ஸர்வேஸ்வரனுக்கு ஸர்வ சக்திகளில் இச்சா சக்தி, க்ரியா சக்தி என்கிற இரு விசேஷமான சக்திகள் உண்டு. இச்சா சக்தி ஸ்ரீ மஹாலக்ஷ்மியும், க்ரியாசக்தி ஸ்ரீ சக்ரரூபமான ஸ்ரீ ஸுதர்ஶந ஆழ்வானும் ஆவார்கள். பகவான், ஸ்ரீஸுதர்ஶநனைக்கொண்டு ஸகல பாபங்களையும், எல்லாவிதமான தோஷங்களையும், கஷ்டங்களையும் விலக்கி அடியார்களுக்கு ஸகலவிதமான க்ஷேமங்களையும் அளிக்கிறான். மேற்படி நம் தேவஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஸுதர்ஶநாழ்வானுக்கு நாளது பராபவ ௵ ஆனி மீ 21ம் தேதி (05.07.2026) ஞாயிற்றுக்கிழமை ப்ரபல ஆகம விற்பன்னர்களால் ஸ்ரீ மஹா ஸுதர்ஶந ஹோமம் நடத்திக் கொள்வதாக திருவுள்ளம் பற்றியிருக்கிறான். இவ்வைபவத்தில் ஆஸ்திகோத்தமர்கள் ஸகல விதத்திலும் கலந்து கொண்டு ஸ்ரீஸுதர்ஶந ஆழ்வான் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்ரர்களாகும்படி ப்ரார்த்திக்கிறோம்.

_தர்மகர்த்தாக்கள்_

R. முகுந்தன் L.N. ஸ்ரீனிவாசன் P. ஸ்ரீஹரி

## உத்ஸவ விவரம் / நிகழ்ச்சி நிரல்

_05.07.2026 - ஞாயிற்றுக்கிழமை_

காலை 8.00 முதல் - ஸ்ரீஸுதர்ஶந ஹோமத்திற்காக அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், சதுஸ்தானார்ச்சனை (கும்பம், மண்டலம் ஆராதனம்), ஸங்கல்பம்

காலை 10:00 மணி - ஹோமம் ஆரம்பம்

மதியம் 12:00 மணி - பூர்ணாஹுதி

மதியம் 12:30 மணி - ப்ரஸாத விநியோகம்

**ஸங்கல்ப நன்கொடை ரூ. 1250/-**

ஸேவார்த்திகள் ஹோமத்திற்குண்டான பசுநெய், தேன்,
பழங்கள், புஷ்பங்கள் போன்ற திரவியங்கள் மற்றும் நன்கொடைகளை
தேவஸ்தான அலுவலகத்தில் நேரில் செலுத்தலாம்

பராபவ ஸ்ரீ ஆனி மீ
ஜூன் - ஜூலை 2026

மலர்: 9
இதழ்: 3


ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

**ஞாயிறு முதல் புதன் வரை**

6.30 - விச்வரூபம்
8.30 - திருவாராதனம்
9.45 - சாற்றுமுறை

**வியாழன் முதல் சனி வரை**

6.00 - விச்வரூபம்
7.30 - பொது தரிசனம்

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது


**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ R. முகுந்தன் | ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன் | ஸ்ரீ P. ஸ்ரீஹரி

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி



**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai & 87, Cell : 95000 45604
Designed by: ye**SK**ay designs





**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com




ஶ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

ஜ்யேஷ்டா என்று ப்ரஸித்தி பெற்ற இந்த ஆனி மாதத்தின் இதழில் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் அருளிய ஸ்ரீவைஷ்ணவ தினசரி எனும் திவ்ய ப்ரபந்தத்தின் ஏழு மற்றும் எட்டாம் பாசுரங்களின் வாயிலாக இஜ்யா காலத்திற்கு அடுத்த படியான ஸ்வாத்யாயம் எனும் நான்காவதான காலத்தில் பாகவதர்கள் அனுஷ்டிக்க வேண்டியவற்றை அநுஸந்திக்கிறார்.

மலைபோன்ற கலங்காத நிலையுடைய பாகவதர்கள், மணம் வீசுகின்ற மலரில் அவதரித்த பிராட்டி மிகப் பொருந்தி வஸிக்கப்பெறுகின்ற ஸ்வாமியான பேரருளாளனுடைய சதங்கை ஒலிக்கின்ற திருவடித்தாமரைகளை நெருங்கியதும், குளிர்ந்த சந்த்ரனைப் போன்றதான தெளிவான மனத்துடன், அந்த மனது அம்ருதத்தை அநுபவிப்பதற்காக, வேதங்களுள் சிறந்தவைகளாக எண்ணப்படுகின்ற மூலமந்த்ரம் - த்வயம் - சரம ச்லோகம் முதலிய ரஹஸ்ய மந்த்ரங்களின் வரிசையை அநுஸந்திப்பர் என்று ஸ்வாமி அநுஸந்திக்கிறார்.

பரம பாகவதர்கள் இந்த ஸ்வாத்யாய காலத்தில் மணம் வீசும் கமலத்தில் அவதரித்த பெருந்தேவி நாச்சியார் நன்றாக நித்யவாஸம் செய்கிற தேவப்பெருமாளுடைய திருவடித்தாமரைகளைக்கு ஆராதனம் செயதபின்பு அவன் அமுதுசெய்த ப்ரஸாதத்தை தாமும் ஸ்வீகரித்துக் கொண்ட பின்பு, தங்களுடைய மனதிற்கு ரஞ்சிதமான மந்த்ர த்ரயங்களுடைய அர்த்தங்களை ரஸித்தபடி இருப்பர் என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்கிறார்.

ஸாதனங்களான எந்த ஜ்ஞாநத்தால் மோக்ஷம் அடையப்படுமோ அந்த ஜ்ஞாநபூர்த்தி உடையவரும், பகவானைத்தவிர மற்ற பதார்த்தங்களில் விரக்தியான வைராக்யம் நிறைந்தவரும், அந்த ஸாதனங்களால் பகவானுடைய பரத்வத்தை அனுபவித்து அந்த அனுபவத்தினால் உண்டான பக்தி நிறைந்தவருமான ஆனி அனுஷத்தில் அவதரித்த ஸ்ரீமந்நாதமுனிகள் போன்று உள்ள மஹான்களையே இங்கு ஸ்வாமி தேசிகன் உதாஹரிக்கின்றார்.

பெருஞ்சோதி தனில் தோன்றிய விஷ்ணுசித்தரும் ''பிரமனைப் படைத்த காரணப்பொருளான கண்ணனே! உன்னுடைய அடியவனான எனக்கு ஆஹாரம் கிடைக்காத நாள் பட்டினி நாளே அன்று; பின்பு, என்றைக்கு நான் திருமந்த்ரமான நாரண நாமத்தை ஜபிக்கவில்லையோ, என்றைக்கு நான்கு வேதங்களைக் கொண்டு உன்னைத் துதித்து திருவாராதனம் செய்யவில்லையோ, அன்றே எனக்குப் பட்டினி நாள்'' என்று எட்டெழுத்து மந்திரத்தின் பெருமையைப் பரக்க உபதேசிக்கிறார்.

இந்த இதழில், அர்த்த பஞ்சகத்தின் பெருமை கூறும் காப்பகக் கட்டுரை, வழக்கமான ஸம்ப்ரதாயத் தொடர்கள், சிறப்புக் கட்டுரைகளுடன், எம்பெருமானின் ப்ரஹ்மோத்ஸவம் மற்றும் மற்றைய உத்ஸவங்களின் வண்ணப்படங்கள் ஆகியவை இந்த ஆனி இதழை அலங்கரிக்கின்றன.

ஸ்ரீ:

# Charting A New Course

## FROM THE DESK OF TRUSTEES

With the divine grace of Maadamaamayilai Divya Dampathis and the boundless blessings of our Acharya Sarvabhouman Sri Vedantha Desikan, we are delighted to present the **99th issue of Desika Sandesam** to our esteemed readers and devotees.

The month of **Vaikasi** witnessed the grand celebration of the **Annual Brahmotsavam** of our Devasthanam. The enthusiastic participation of a large number of devotees, well-wishers and volunteers made the celebrations a memorable and spiritually uplifting experience.

As we enter the auspicious month of **Aani,** several significant spiritual events have been planned for the benefit of devotees and the welfare of society at large.

**Aani Utsavams**

**Seven-Day Kodai Utsavam:** The annual Kodai Utsavam will be celebrated for seven days with special alankarams, aradhanams and purappadus. This festival provides devotees an opportunity to offer their humble service to the Lord during the summer season and receive His divine blessings.

**Sri Sudarsana Mahayajnam:** One of the most important spiritual events scheduled during Aani is the **Sri Sudarsana Mahayajnam.** The performance of Sudarshana Homam and Mahayajnam is extolled in our scriptures for bestowing numerous benefits, including:

- Removal of obstacles and adverse influences.
- Protection from diseases and negative forces.
- Prosperity, peace, and harmony in family life.
- Success in righteous endeavours.
- Spiritual progress and divine grace.
- Welfare of society, environmental harmony, and universal peace.

**Grand Opening of New Facilities**

We are immensely pleased to announce the **Grand Opening of the newly constructed 'Sri Nivasam' (Archaka Quarters No. 2) and 'Kamala Thothadri Hall' – A Multi-Purpose Facility on 15th June 2026.**

These facilities have been created with the objective of serving the needs of our Archakas and providing enhanced amenities for devotees and community activities. This has been achieved only through the generous support and unwavering commitment of our donors and well-wishers. On behalf of the Devasthanam, we place on record our heartfelt gratitude to all of them.

**New Matrimonial Column**

With a view to strengthening bonds within our community and serving the needs of devotees, we are happy to introduce a **Matrimonial Column** in Desika Sandesam from this issue onwards. Devotees seeking suitable alliances are encouraged to make use of this free community service. For registration and further details, devotees may kindly contact the Devasthanam Office.

**Towards a Historic Milestone**

As we prepare to celebrate the publication of the **100th issue** next month, we reflect with gratitude on this remarkable journey. What began as a humble effort to connect devotees and disseminate spiritual knowledge has today become a cherished monthly publication.

We convey our sincere appreciation to the members of the Editorial Board, contributors, advertisers, sponsors and readers whose encouragement and support have enabled the uninterrupted publication of the magazine month after month. We look forward to celebrating the forthcoming centenary issue with all our devotees.

May the divine blessings of Swamy Desikan, Sri Lakshmi Hayagriva and the Divya Dampathis be upon all devotees and their families.

ஸ்ரீ:

| பராபவ வருட ஆனி மாத பஞ்சாங்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
| ஜூன்/ ஜூலை | ஆனி | | | | | |
| 15.06.2026 | 1 | ப்ரதமை | திங்கள் | ம்ருகசீர்ஷம் | மாதப்பிறப்பு. காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ M.V. ஸ்ரீநிவாஸன் குடும்பத்தினர் |
| 16.06.2026 | 2 | த்விதீயை | செவ்வாய் | திருவாதிரை | ஸ்ரீபாஷ்யகாரர் | |
| 17.06.2026 | 3 | த்ருதீயை | புதன் | புனர்வஸு | கோடை உத்ஸவம் 1-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ K.S. ஸந்தானம் - ஸ்ரீ K. வரதராஜன் |
| 18.06.2026 | 4 | சதுர்த்தி | வியாழன் | புஷ்யம் | கோடை உத்ஸவம் 2-ம் நாள். காலை பெருமாள்,தாயார் உத்ஸவர் திருமஞ் ஜனம்.மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | Dr. C.V. கோபால் - ஸ்ரீ V.P. ப்ரேம்குமார் |
| 19.06.2026 | 5 | பஞ்சமி | வெள்ளி | ஆயில்யம் | கோடை உத்ஸவம் 3-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை தாயார் உள்புறப்பாடு, பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன் - ஸ்ரீ K. ரங்கராஜன் |
| 20.06.2026 | 6 | ஷஷ்டி | சனி | மகம் | கோடை உத்ஸவம் 4-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ T.P. ரங்கராஜன் - ஸ்ரீ G. பத்ரி நாராயணன் |
| 21.06.2026 | 7 | ஸப்தமி | ஞாயிறு | பூரம் | கோடை உத்ஸவம் 5-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன் - ஸ்ரீமதி ஸ்ரீநிதி மோஹன் |
| 22.06.2026 | 8 | அஷ்டமி | திங்கள் | உத்திரம் | கோடை உத்ஸவம் 6-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை தாயார் உள்புறப்பாடு, பெருமாள் வீதிபுறப்பாடு | Dr. P. க்ருஷ்ண மூர்த்தி - ஸ்ரீ N. ஸ்ரீநிவாஸன் |
| 23.06.2026 | 9 | நவமி | செவ்வாய் | ஹஸ்தம் | கோடை உத்ஸவம் 7-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ R.S. ராகவன் - ஸ்ரீ N.R. ஸ்ரீநிவாஸாசாரியார் |
| 24.06.2026 | 10 | தசமி | புதன் | சித்திரை | ஸ்ரீ ஸுதர்சன ஜயந்தி. மூலவர், உத்ஸவர் திருமஞ்ஜனம், ஆஸ்தானம் | ஸ்ரீ N.R. ராமஸ்வாமி |
| 25.06.2026 | 11 | ஏகாதசி | வியாழன் | ஸ்வாதி | பெரியாழ்வார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், ஆழ்வார் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் சின்ன கருடன், ஆழ் வார் யானை வாஹனம், வீதி புறப் பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ மாடபூசி ஸுதர் சனம் ஐயங்கார் பண்ட் |
| 26.06.2026 | 12 | த்வாதசி | வெள்ளி | விசாகம் | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் உள்புறப்பாடு | ஸ்ரீ S. பாலாஜி |
| 27.06.2026 | 13 | த்ரயோதசி | சனி | அனுஷம் | ஸ்ரீமந் நாதமுனிகள் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், நாதமுனிகள் திருமஞ் ஜனம். மாலை வீதிபுறப்பாடு, ஆஸ் தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | திருமஞ்ஜனம்: ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் பண்ட். புறப்பாடு: ஸ்ரீ A. வாஸுதேவன் - N.V. பாலாஜி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 28.06.2026 | 14 | சதுர்தசி | ஞாயிறு | கேட்டை | தொண்டரடிப்பொடியாழ்வார் | |
| 29.06.2026 | 15 | பௌர்ணமி | திங்கள் | மூலம் | திருமால்வடை | |
| 30.06.2026 | 16 | பௌர்ணமி / ப்ரதமை | செவ்வாய் | பூராடம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ N. ஸ்ரீநிவாஸன் |
| 01.07.2026 | 17 | ப்ரதமை / த்விதீயை | புதன் | பூராடம் / உத்திராடம் | ஸேனைநாதன் | |
| 02.07.2026 | 18 | த்விதீயை / த்ருதீயை | வியாழன் | உத்திராடம் / ச்ரவணம் | ஆளவந்தார் | |
| 03.07.2026 | 19 | த்ருதீயை / சதுர்த்தி | வெள்ளி | ச்ரவணம் | பெருமாள், தாயார் மூலவர் உத்ஸவர், தேசிகன் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், தேசிகன் வீதிபுறப்பாடு. பின்பு தாயாருடன் உள்புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ச்ரவணம்: கொடநகர் Dr. துரைஸ்வாமி ஐயங்கார் பண்ட். தாயார் உத்ஸவம்: ஸ்ரீ அழிசூர் நாராயணன் |
| 04.07.2026 | 20 | சதுர்த்தி / பஞ்சமி | சனி | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 05.07.2026 | 21 | பஞ்சமி / ஷஷ்டி | ஞாயிறு | சதயம் | ஸ்ரீ ஸுதர்சன ஹோமம். காலை பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு. | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 06.07.2026 | 22 | ஷஷ்டி / ஸப்தமி | திங்கள் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 07.07.2026 | 23 | ஸப்தமி / அஷ்டமி | செவ்வாய் | உத்திரட்டாதி | திருமால்வடை | |
| 08.07.2026 | 24 | அஷ்டமி / நவமி | புதன் | ரேவதி | திருமால்வடை | |
| 09.07.2026 | 25 | தசமி | வியாழன் | அச்வினி | திருமால்வடை | |
| 10.07.2026 | 26 | ஏகாதசி | வெள்ளி | பரணி / க்ருத்திகை | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. பின்பு தாயாருடன் உள்புறப்பாடு | ஏகாதசி: ஸ்ரீ V. ராஜகோபாலன் குடும்பத்தினர். தாயார் உத்ஸவம்: ஸ்ரீ ஸ்ரீராமன் |
| 11.07.2026 | 27 | த்வாதசி | சனி | க்ருத்திகை / ரோஹிணி | திருமங்கையாழ்வார் | |
| 12.07.2026 | 28 | த்ரயோதசி | ஞாயிறு | ரோஹிணி / ம்ருகசீர்ஷம் | ஸ்ரீ கண்ணன், திருப்பாண் ஆழ்வார் | |
| 13.07.2026 | 29 | சதுர்தசி | திங்கள் | திருவாதிரை | ஸ்ரீபாஷ்யகாரர் | |
| 14.07.2026 | 30 | அமாவாசை | செவ்வாய் | புனர்வஸு | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ M.A. பார்த்தஸாரதி |
| 15.07.2026 | 31 | ப்ரதமை / த்விதீயை | புதன் | புஷ்யம் | திருமால்வடை | |
| 16.07.2026 | 32 | த்விதீயை / த்ருதீயை | வியாழன் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 17.07.2026 | ஆடி 1 | த்ருதீயை / சதுர்த்தி | வெள்ளி | மகம் | தக்ஷிணாயன புண்யகாலம். காலை பெருமாள், தாயார் மூலவர், தேசிகன் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பொழுதுடன் ஆராதனம். பெருமாள் வீதிபுறப்பாடு. பின்பு தாயாருடன் உள்புறப்பாடு | மாதப்பிறப்பு: ஸ்ரீ S. ராமஸ்வாமி. தாயார் உத்ஸவம்: ஸ்ரீ ராகவன் |

ஸ்ரீ:

# வைணவ வழக்குச் சொற்கள் 22

**வலி அழிவு:** சக்தி இழத்தல்

**வாரை:** பல்லக்கு முதலிய சிறு ஏளுவிக்கைகளைத் தூக்கப் பயன்படுத்தும் மூங்கில்

**வாழ்ச்சி:** வாழ்வு, உஜ்ஜீவனம்

**வாசி:** தொடர்பு, வேற்றுமை; Relationship

**வாழித் திருநாமம்:** ஆழ்வார், ஆசார்யார்களைப் போற்றித் துதிக்கும் பாசுரம்

**வானவர்:** நித்ய ஸூரிகள்

**வாய் நேர்தல்:** கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருத்தல்; To commit

**வாய் வெருவுதல்:** புலம்பிப் பிதற்றுதல்

**விண்ணப்பம் செய்வார்:** அரையர்

**விடுகாது:** மூளிக்காது

**விடுநகம்:** சித்திரவதை

**விடுநாண்:** சங்கிலி

**வியூகம்:** நாராயணன் பாற்கடலில் பள்ளி கொண்ட நிலை

**விண்ணப்பித்தல்:** வேண்டிக்கொள்ளல்; Submission

**விண்ணகரம்:** கோவில்

**விபவம்:** பெருமாளின் அவதார (பிறப்பு) நிலை; தேவர், மனிதன், விலங்கு, தாவரம் முதலிய உருவங்களை ஸங்கல்பத்தால் ஏற்றுக்கொண்டு மண்ணுலகில் தோன்றும் நிலை

**விபூதி:** வெளிப்பாடு; Manifestation

**விஷயாந்தரம்:** விருத்தி; இதர விஷயங்களில் ஈடுபாடு

**விஷ்வக்ஸேனர்:** ஸேனை முதலியார்

**விளம்பம்:** தாமதம், காலம் தாழ்த்துதல்

**விருத்தம்:** விரோதம், முரணானது; Contradiction

**விஸர்ஜனம்:** விடுதல், வெளியேற்றுதல்

**விச்லேஷம்:** பிரிவு

**வீடு:** மோக்ஷம்

**வெறி:** மணம், பரிமளம்; ஆசை

**வெப்பு:** காய்ச்சல் (ஜ்வரம்)

வென்றி பகை: காவல்

**வேணும்:** வேண்டும்

**வேத்திர பாணிகள்:** பிரம்புடன் ஊர்வலக் கூட்டத்தை ஒழுங்குபடுத்துவோர்

**வைனதேயன்:** கருடன்

**வைதிகன்:** ரிஷி

**வைகுண்ட வாஸி:** காலஞ்சென்ற, Late

**வைலக்ஷண்யம்:** அழகு, நேர்த்தி

வைஷம்யம்: அநீதி, சமமாக நடத்தப்படாமை

**வையாளி, ஒய்யாளி:** ஊஞ்சல், பெருமாளை அசைந்து ஆடியவண்ணம் எழுந்தருளப்பண்ணும் விமர்சை

**வைபவம்:** சிறப்பு, மேன்மை

**வெள்ளம்:** பல, நிறைய

**வேர்ப்பற்று:** முக்கியமான, நெஞ்சம், ஆதாரம், மூலகாரணம்

**ஸ்ரீயாத்தான், சீயாத்தான்:** தேர்ச்சி மிகு அறிஞர்; Scholar

**ஸ்ரீபண்டாரம்:** கருவூலம்; நிதி, விலையுயர்ந்த பொருட்கள் முதலியவற்றைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் இடம்; Treasury

**ஸ்ரீஸூக்தி:** பக்தி தொடர்பான எழுத்துப் படைப்புக்கள்

**ஸ்ரீபாஷ்யம்:** ப்ருஹ்ம ஸூத்ரத்திற்கு ராமானுஜர் இயற்றிய விளக்கவுரை

ஸ்ரீதேவி: லக்ஷ்மி

**ஸ்ரீபாதம் தாங்கிகள்:** தம் தோள் கொடுத்து பெருமாளை வாஹனம் (அ) தொட்டி (அ) கேடயத்தில் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு செல்பவர்கள்

**'தென்னிந்திய வைணவம் - ஓர் அறிமுகம்' நூலிலிருந்து**

(தொடரும்...)

## ஆனியில் முக்கிய உத்ஸவங்கள்

**கோடை உத்ஸவம் (7 நாட்கள்)**
ஜூன் 17 (புதன்) முதல் 23 (செவ்வாய்) வரை

**ஸ்ரீ ஸுதர்சன ஜயந்தி**
ஜூன் 24 (புதன்)

**பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்**
ஜூன் 25 (வியாழன்)

**நாதமுனிகள் திருநக்ஷத்ரம்**
ஜூன் 27 (சனி)

**ச்ரவணம்**
ஜூலை 3 (வெள்ளி)

**ஸ்ரீ ஸுதர்சன ஹோமம்**
ஜூலை 5 (ஞாயிறு)

**தக்ஷிணாயண புண்யகாலம்**
ஜூலை 17 (வெள்ளி)

ஸ்ரீ:

# அர்த்த பஞ்சக விமர்சனம்

ஸ்ரீ உ.வே. டி. ரகுநாதாசார்யர் ஸ்வாமி, வைகுண்டவாஸீ

ஈச்வர ஸ்ருஷ்டியில் மனுஷ்ய ஜன்மத்திற்கு, அதிலும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு, முக்யமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் **ஆலோட்ய ஸர்வ சாஸ்த்ராணி விசார்யச புன: புன: இதமேகம் ஸுநிஷ்பன்னம் த்யேயோ நாராயணஸ்ஸதா** (எல்லா சாஸ்த்ரங்களையும் ஆராய்ந்து பார்த்து அடிக்கடி விசாரித்துப் பார்த்ததில் எப்பொழுதும் ஸ்ரீமந்நாராயணனை த்யாநம் செய்யவேண்டும் என்பதொன்று தான் தீர்மானமாக ஏற்படுகிறது) என்கிறபடி.

ரஹஸ்யத்ரயத்தில் கடைந்து எடுத்த அம்ருதம் என்னவென்றால் நாராயணாதி சப்தங்களிலே விவக்ஷிதமான ஜீவ-ஈச்வர ஸம்பந்த விசேஷத்தை அநுபந்தித்திருக்கும் அர்த்த பஞ்சகமே. அதாவது, அவச்யம் தெரிந்துகொள்ள வேண்டியவை ஐந்து விஷயங்கள். அவையாவன:- (1) நாம் அடைய வேண்டிய ப்ருஹ்மத்தினுடைய, அதாவது ஈச்வரனுடைய, ஸ்வரூபம்; (2) ஈச்வரனை அடைகிறதாயும் தேஹத்தைக் காட்டிலும் வேறானதாயுமுள்ள ஆத்ம ஸ்வரூபம்; (3) ஆத்மா ஈச்வரனை எப்படி அடைகிறது; அதாவது அடையும் வழி அல்லது உபாயம்; (4) ஈச்வரனை அடைவதால் ஆத்மாவுக்கு உண்டாகும் பலன்; (5) ஆக்மா ஈச்வரனை அடைவதற்கு விரோதிகள். இவற்றைத் தான் எல்லா வேதங்களும் இதிஹாஸ புராணங்களும் முறையிடுகின்றன.

நமக்கு இந்த அர்த்த பஞ்சகம் லௌகிக வ்யாபாரத்திலும் ஒவ்வொரு விஷயத்திலும் நிச்சயமாய் ஏற்பட்டிருக்கிறது என்பது எளிதாகத் தென்படும். உதாஹரணமாக, நாம் உத்யோகமோ அல்லது வேலையோ செய்து ஸம்பாதிப்பதில், (ஐ) நமக்கு அடையவேண்டிய இடம் வேலை செய்யுமிடம்; (2) அடைகிறவர்கள் நாம்; (3) நாம் வேலை செய்து எஜமானனை ஸந்தோஷப் படுத்துவது வழி; (4) பலம், நமக்கு கிடைக்கும் பணம்; (5) தேஹத்துக்கு உண்டாகும் உபாதி அல்லது தொழிலுக்குப் போகாதபடி ஏற்படும் தடங்கல்கள்.

ஒரு மனுஷ்யன் விதேசத்திலிருந்து ஸ்வதேசத்துக்குப் போகும்பொழுது அர்த்த பஞ்சக ஜ்ஞானத்துடன் செல்லுகிறான். அதாவது, (1) அடைய வேண்டியது சொந்த ஊர்; (2) போவது மனுஷ்யன்; (3) உபாயம் ரயில், மோடார் அல்லது வேறு வண்டி அல்லது



நடை; (4) பலமாவது, பந்து மித்ரர்களைப் பார்ப்பது; (5) விரோதியாவது, வெள்ளம் முதலிய இடஞ்சல்கள்.

இதே மாதிரியாக ஒவ்வொரு விஷயத்திலும் அர்த்த பஞ்சக ஜ்ஞானம் ஏற்பட்டு வேலை செய்கிறோம். ஆனால் ஈச்வரனுடைய கௌஸ்துப ஸ்தாநத்திலிருக்க வேண்டிய நாம் ஸ்வதேசத்தில் இல்லாமல் அந்ய தேசத்திலிருக்கிறோம். சொந்த இடம்போக எண்ணமில்லாமல் இளம் பிள்ளைகளைக் கார்யத்துக்கு ஏவினால் நடுவில் விளையாட்டு விஷயங்களில் ஈடுபட்டுச் செய்ய வேண்டிய கார்யத்தை மறந்திருக்குமாப்போலே மறந்து திரிந்து கொண்டிருக்கிறோம். இப்படி இருக்கிறோமென்று தெரிந்தால் அதிலிருந்து மீண்டு நாம் செல்லவேண்டிய இடத்திறகுப் போகலாம். அந்த ஜ்ஞாபகம் கொஞ்சம்கூட ஏற்படவில்லை. இந்த ஜ்ஞாபகமில்லாதிருப்பது படித்தவர்களுக்கும் படியாதவர்களுக்கும் வாசியில்லாமல் ஒரே மாதிரியாய்த் தான் இருக்கிறது, ஏதோ ஜன்மாந்தர ஸுக்ருதத்தால் நல்ல ஆசார்யர்களின் கடாக்ஷம் உள்ள சில பேருக்குத் தான் இந்த நிலைமை தெரிந்து நாம் அடைய வேண்டிய இடத்தை அடையத் தகுந்த ஏற்பாடு செய்யவில்லையே என்கிற மனக்கவலை உண்டாகிறது. ஆனால் இது ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் அவசயம் ஏற்படவேண்டிய கவலை.

(1) முதலில் மனுஷ்யர்களுக்கு ஆஸ்திக்யம் ஏற்படவேணும். அதாவது, நம் பெரியோர்கள் சொல்லுகிறபடி வேதம் அநாதியென்றும் ஸ்ம்ருதிகள் முதலானவை இதை விவரணம் செய்கிறதென்றும் இவைகள் ஈச்வரனுடைய ஆஜ்ஞைகளென்றும் அநாதிகாலமாக இந்த ஆஜ்ஞைகளை மீறி நடந்ததால் உண்டான பகவந்நிக்ரஹத்தாலே இப்பொழுது நமக்கு ஸம்ஸார தசை வந்திருக்கிறதென்கிற எண்ணமும் உண்டாகவேணும், இல்லாவிட்டால் வேறுவிதமாய் இந்த மனுஷ்ய ஜன்மம் ஏற்பட்டதிற்குக் காரணம் ப்ரமாண பூர்வகமாகச் சொல்லமுடியாது. நம்மை விட ஸர்வஜ்ஞராயிருந்த நம் பூர்வாசார்யர்களின் அபிப்ராயங்களில் நமக்கு நம்பிக்கை உண்டாக வேண்டும். நம்பிக்கை பிறந்தால் இந்த ஜகத்தை உண்டுபண்ணி அதை ஸம்ரக்ஷித்து வருகிறவர் ஒருவர் இருக்கிறாரென்றும், அவருக்கு அளவில்லாத ஜ்ஞானம், சக்தி, ஆனந்தம், வீர்யம், தேஜஸ், தயை, பொறுமை, ஸத்யம், ஸௌசீல்யம், ஸௌலப்யம் முதலிய குணங்கள் இருக்கின்றனவென்றும், அவர் ஸ்ரீமந்நாராயணனென்றும் எல்லா லோகங்களும் அவர் ஸொத்து என்றும் அவருக்கு நாம் எப்பொழுதும் அடிமை செய்யக் கடமைப்பட்டவர்களென்றும், கர்மத்தால் ஸர்வவித பந்துவான அவரை விட்டுப் பிரிந்து அவர் ஜ்ஞாபகமே இல்லாமல் திரிந்து கொண்டிருக்கிறோமென்றும், அவரை மீண்டும் அடைவதே நமக்குப் புருஷார்த்தமென்றும், அவருக்கு நாம் வந்து சேரவில்லை என்கிற கவலை **ஸமஹாத்மாஸு துர்லப:** (தன்னைப் பக்தி செய்து அடைகிறவர்கள் மிகவும் அபூர்வம்) என்கிறபடியே அதிகமாக இருக்கிறதென்றும், ஸதாசார்யன் மூலமாய்த் தெரிந்துகொள்ள வேண்டும்.

(2) நம் தேஹத்தில் ஜீவன் ஒன்று இருக்கிறதென்றும், அது நித்யமென்றும், அதற்கும் ஈச்வரனுக்கும் ஸமமான சில குணங்கள் இருக்கின்றனவென்றும் ஆகையால் ஸமான ஸ்தானமாகிற பரமபதத்தை அது அடையத் தகுந்ததென்றும் தெரிந்துகொள்ள வேண்டியது.

(3) இப்படித் தெரிந்துகொண்டால் அவரை அடைவதற்கு உபாயம் என்ன என்கிற விசாரம் ஏற்படும். ஈச்வானை அடைய பக்தி, ப்ரபத்தி என்று இரண்டு வழிகள் உண்டு. அதில் முதலான பக்தி மிகவும் ச்ரம ஸாத்யமாயும் கால விளம்பமுள்ளதாயும் இருப்பதால் இத்தக் கலியுகத்தில் பக்தியை சரிவர நடத்தமுடியாதென்று பார்த்து வர்ணாச்ரமாதி நியமமற எல்லோரும் உஜ்ஜீவிக்க வேண்டுமென்று க்ருபை மேலிட்டு ஸ்ரீதேசிகன் ரஹஸ்யத்ரய ஸாரம் என்கிற க்ரந்தத்தில் ப்ரபத்தியினுடைய மஹிமையையும் அதை எப்படி அனுஷ்டிக்கிறது என்பதையும் அவர்களுடைய ஜ்ஞானம், சக்தி, விச்வாஸம், பக்தி இவைகளுக்குத் தகுந்த மாதிரி செய்யவேண்டிய முறைகளையும் விசதமாக அருளிச்செய்கிறார். ப்ரபத்தி அநுஷ்டானத்தை ஸ்வ நிஷ்டை, உக்தி நிஷ்டை, ஆசார்ய நிஷ்டை என்று மூன்று விதமாக ஏற்படுத்தி அதில் ஆசார்ய நிஷ்டையே மிகவும் நிபுண க்ருத்யமென்று அபிப்ராயப் பட்டிருக்கிறார். ஸர்வ ஸம்பன்னனாய் கல்யாண குணங்களோடு கூடிய ஒரு ப்ரபு அல்லது ராஜாவைப் பார்த்துத் தன்னுடைய இஷ்டபூர்த்தியையடைய உத்தேச்யமுள்ளவன் எப்படி அந்த ப்ரபுவுக்கு அந்தரங்கனாயிருப்பவனைக் கொண்டு தன் இஷ்டத்தைச் ஸாதித்துக் கொள்வானோ, அதைப்போல் ஈச்வரனுக்கு ஆத்ம ஸ்தானராயிருக்கும் ஆசார்யரைக் கொண்டு தேஹாவஸானத்தில் மோக்ஷத்தை அபேக்ஷிப்பது ஆசார்ய நிஷ்டை. இந்த ப்ரபத்தி சாஸ்த்ர மானது ஸ்ரீபகவான் கண்ணபிரானால் அர்ஜுனனுக்குப் பாரத யுத்தத்தில் உபதேசிக்கப்பட்டது. இதை உலகத்தில் எல்லோரும் மோக்ஷோபாயமாக அனுஷ்டித்து உஜ்ஜீவிக்கட்டும் என்கிற க்ருபையால் அர்ஜுனனை வ்யாஜமாகக் கொண்டு எல்லோருடைய யோக க்ஷேமத்தின் பொருட்டும் உபதேசிக்கப் பட்டதென்று பூர்வாசார்யர்கள் திருவுள்ளம் பற்றியிருக்கிறார்கள். ஆகையால் நாம் ஈச்வானை அடைய நல்ல ஆசார்யன் மூலமாய்ப் ப்ரபத்தி செய்யவேண்டியது அவச்யம். இல்லாவிட்டால் ஆற்றின் வெள்ளத்தைக் கடந்துபோகக்



கொடுத்த தெப்பத்தைக் கொண்டு அக்கரை சேராமல் ஆற்றோடு சென்று கஷ்டப்படும் மனுஷ்யர்களைப் போல இந்தத் தேஹம் இருக்கும்பொழுதே ஸ்ரீமந்நாரயணனுடைய ஸ்தானமாகிய பரமபதத்தை ஸதாசார்யன் மூலமாய் அடைய வழிதேடாமல் மறுபடியும் கர்மாநுகுணமாகக் கெட்ட ஜன்மத்தையோ அல்லது நல்ல ஜன்மத்தையோ எடுத்துக் கர்ப்ப வாஸாதி கஷ்டங்களை அனுபவிக்கும்படி நேரிடும்.

(4) ப்ரபத்தி செய்து தலைக்கட்டினால் நமக்குக் கிட்டுவது மோக்ஷம். அதில் ஜீவன் அளவற்ற நித்ய ஸுகத்தையும் நித்யமான பகவத் கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தையும் அநுபவித்துக்கொண்டு கர்ம ஸம்பந்தமான பிறப்பு இல்லாமலிருக்கும். ஆகையால் தான் அதை எல்லோரும் அடைய முயலவேண்டியது அவச்யம். இதுதான் ஜீவனுக்கு இயற்கையான நிலைமை அல்லது ஸ்வரூபம்.

(5) மோக்ஷத்தை அடைவதற்கு விரோதிகள் இன்னவையென்று தெரிந்து அவைகளைப் போக்க முயலவேணும், அவை அஜ்ஞானம், கர்மம், வாஸனை முதலானவை. இவற்றில் முக்யமானது நீடூழிகாலமாய்ப் பகவானுடைய இஷ்டப்படி நடவாததினால் அவனுக்கு உண்டான நிக்ரஹ ஸங்கல்பம் அல்லது கோபம். இதற்குக் காரணமாய் நமக்கு விரோதியாயிருக்கும் பாபமானது நம்மை நல்ல ஆசார்யர்களை அடைந்து நமக்கு ஹிதமான விஷயங்களைக் கேட்டு அனுபவிக்காதபடி செய்கிறது; கெட்ட விஷயத்தில் ருசியையும் உண்டுபண்ணி நம்மை இந்த்ரிய கிங்கராகச் செய்து சாப்பிடுவதும், போகங்களை அனுபவிப்பதுமே புருஷார்த்தமென்ற பொய்நின்ற ஞானத்தைக் கொடுத்து ஸம்ஸாரத்தில் கிடந்து தவித்துக்கொண்டிருக்கும் படியும், மற்றும் உலகத்தில் நாம் பார்த்துக்கொண்டிருக்கும் விசித்ர அவஸ்தைகளுக்கு உள்ளாக்கிப் பல ஜன்மங்களை எடுத்துக் கஷ்டப்படும் படியும் செய்கிறது. இந்த விரோதிகளைப் போக்க நல்ல ஆசார்யர்களை அடைந்து நம் கெடுதல்களைத் தெரிந்துகொண்டு நம்மாழ்வாரும் பூர்வாசார்யர்களும் கதறினாற்போல் நம் பாபத்தை எண்ணி எப்பொழுதும் ஈச்வரனை நினைத்து மனம் உருகினால் ஈச்வரன் க்ருபை பண்ணுவான்.

ஆகையால், நம் தேஹித்தைத் தவிர வேறு ஆத்மா ஒன்று இருக்கிறதென்றும், இந்த ஆத்மா அடையவேண்டிய இடம் பரமபதமென்றும் அதற்கு உபாயம் நல்ல ஆசார்யர்களைச் சேர்ந்து, இத்தனை நாள் ஈச்வரனை அடையாமல் தடுத்துக்கொண்டிருந்த விரோதிகளைத் தெரிந்துகொண்டு அவற்றை விலக்கி அவ்வாசார்யர்கள் மூலமாய்ப் ப்ரபத்தி செய்து க்ருதக்ருத்யனாக வேண்டுமென்றதாயிற்று.

இந்த ஐந்து ஸங்கதிகளும் மனதிற்பட்டால் மனுஷ்ய ஜன்மம் க்ருதார்த்தமாகும். இவை மனதில் எப்பொழுதும் நிலைபெற்றிருந்தால், ஜீவன உபாயத்திற்காக எந்தத் தொழிலைச் செய்தாலும் பாதகமில்லை. பிறர் எவ்விதமான கோபம் உண்டாகக்கூடிய வார்த்தைகளைச் சொன்னாலும் மனஸ்தாபம் ஏற்படாது. எல்லாருடனும் ப்ரியமாய்ப் பேசிக்கொண்டும் வணக்கமாய் இருந்துகொண்டும் இருப்பதில் ருசியுண்டாகும். இதனால் மனது மிகவும் ஸந்தோஷமாயும் எவ்வித கஷ்டங்கள் வந்தாலும் கவலையில்லாமலும் இருக்கும். இவ்வுலகத்தில் உள்ள நாள் வரையில் ஸௌக்யமாயும் பிறருக்கு உபகாரகமாயும் இருந்து பிற்பாடு மோக்ஷத்தையும் அடையலாம்.





# SVDD's
# New Multi-purpose Facility

Sri Vedantha Desikar Devasthanam's
**'Kamala Thothadri Hall',**
a new Multi-purpose Facility for conducting small functions, upayasams, music programmes, etc., available for rent at
No. 25/13 Chitrakulam South Street,
Mylapore, Chennai - 600 004.

**For further details, contact the temple office. Phone: 044-24953799, 044-43863747.**

ஸ்ரீ:

# ஸ்ரீ அபயப்ரதாந ஸாரம் (5)
## அதிகாரம் - 3 - சரணாகதி தாத்பர்ய ப்ரபஞ்ச:
## அயோத்யா காண்டத்தில் சரணாகதி

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

ஸ்ரீமத்ராமாயணம் முழுவதுமே சரணாகதி தர்மத்தைப் போதிப்பதற்காகவே அவதரித்தது. இந்த சரணாகதி சாஸ்த்ரத்தை எம்பெருமானார், தமது ஆசார்யரான திருமலை நம்பிகளிடம் பதினெட்டு முறை ஸேவித்து, ஒவ்வொரு முறையும் புதிய விசேஷார்த்தங்களை ஸ்வீகரித்தார். அத்தகைய அரிய விசேஷார்த்தங்களில் பலவற்றை நாம் ஸ்வாமி தேசிகனின் திருவாக்கின் மூலமாக அனுபவித்து வருகிறோம்.

முன்னதாக, பாலகாண்டத்தில் தேவர்கள் ச்ரிய:பதியான ஸ்ரீமந்நாராயணனிடத்தில் பண்ணிய சரணாகதியையும், த்ரிசங்கு மற்றும் சுனச்சேபர் விச்வாமித்ரரிடத்தில் பண்ணிய சரணாகதியையும் எடுத்துக்காட்டி, சரணாகத-ரக்ஷண தர்மம் ஸ்ரீமத்ராமாயணத்தின் பாலகாண்டத்தில் எவ்வாறு அநுஷ்டிக்கப்பட்டது என்பதை ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்தார். இனி, அயோத்யாகாண்டத்தில் அநுஷ்டிக்கப்பட்ட சரணாகதியின் வைபவத்தை ஆசார்யவள்ளல் எடுத்துதுரைப்பதைப் பார்ப்போம்.

**இளையபெருமாள் சரணாகதி**

கைகேயியின் வார்த்தைக்கிணங்கி, பித்ரு வாக்ய பரிபாலனத்திற்காகப் பெருமாள் ஸ்ரீராமபிரான் வனவாஸத்திற்குப் புறப்படத் தயாரானார். தன்னை அயோத்தியில் விட்டுவிட்டு ராமர் மட்டும் காட்டிற்குச் செல்ல எண்ணியதை அறிந்த ஸீதாபிராட்டி, அதனை ஏற்க மறுத்தாள். ஸஹதர்மசாரிணியான அவள்,

‘‘புருஷோத்தமா! தாய், தந்தை, ஸஹோதரன், மைந்தன் ஆகியோர் தத்தம் புண்ய-பாப பலனிற்கேற்ப ஸுக-துக்கங்களைப் பெற்று தத்தம் கர்மவினையை அனுபவிக்கின்றனர். ஆனால் பத்னி ஒருத்தி மட்டுமே தனது பர்தாவின் பாக்யத்தில் பங்கு பெறுகிறாள். ஆதலால், தேவரீருடன் நானும் காட்டில் வசிக்கவேண்டுமென்பதே எனக்குரிய தர்மம். ஸ்த்ரீகளுக்கு தங்கள் கணவர் ஒருவரே புகலிடம். பதியைப் பிரிவதனால் ஸ்வர்க ப்ராப்தி உண்டாகும் என்றாலும்கூட, அதனை நான் விரும்பமாட்டேன். ராகவரே! தாங்கள் இப்போதே காட்டிற்குப் புறப்பட்டுவிட்டீர்கள் என்றால் நான் தங்களுக்கு முன்பாகச் சென்று தங்கள் பாதையிலுள்ள புற்களையும் முட்களையும் மென்மைப்படுத்திக் கொண்டு செல்வேன். தங்களைத் தவிர வேறு எதையும் மனத்தாலும் நினைக்காதவளும், தங்களுக்கு அநுகூலமாகவே என்றும் இருப்பவளும், தங்களைப் பிரிந்தால் உடனே உயிரை விடுவது என்று நிச்சயத்திருப்பவளுமான என்னை, என் ப்ரார்த்தனையை திருவுள்ளமுவந்து தேவரீர் அங்கீகரித்து என்னையும் காட்டிற்கு அழைத்துச் செல்லவேணும்’ என்று பெருமாளிடத்தில் விண்ணப்பித்தாள்.

பலவிதமான ஆறுதல் வார்த்தைகளைக் கூறிய பின்னரும், வனவாஸத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்த ஜானகியைப் பார்த்து, ராமபிரான், ‘‘ஸீதே! என்னைப் பின்தொடர்ந்து வந்து வனவாஸம் செய்ய உறுதிகொண்டு விட்டாய். எனவே என்னுடைய பழைய முடிவை மாற்றிக்கொண்டு உன்னையும் தண்டகாரண்யத்திற்கு அழைத்துச் செல்லத் தீர்மானித்துவிட்டேன். நீ என்னுடன் வனவாஸம் செய்வதற்காகவே படைக்கப்பட்டுள்ளாய்; உன்னைப் பிரிந்து என்னாலும் இருக்க இயலாது; என்னைப் பின் தொடர்ந்து வா; என்னுடன் இருந்து கொண்டு நான் அநுஷ்டிக்கும் தர்மத்தில் நீயும் பங்குகொள்வாயாக!’’ என்றார்.

*ஸ ப்ராதுச்சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந: ।*
*ஸீதாமுவாசாதியசாம் ராகவம் ச மஹாவ்ரதம் ॥*
(அயோ. கா. 31-2)

இந்த ஸம்வாதம் முழுவதையும் கேட்டுக் கொண்டிருந்த, கைங்கர்யத்திற்க்காகவே இட்டுப்பிறந்த இளையபெருமாள், தம் ப்ராதாவான ஸ்ரீராமபிரானின் திருவடிகளை இறுகப்பற்றி, மைதிலியை நோக்கி, கண்களில் நீர் ததும்ப உபாய பரிக்ரஹத்தை அநுஷ்டித்தார்.

இங்கே உபாயமானது சரணாகதியே. பெருமாள் - பிராட்டி இருவரும் சேர்ந்திருக்கும் ஒரு ஸந்நிவேசத்தில் இளையபெருமாள் ப்ரபத்தியை அநுஷ்டித்ததாக ஸ்வாமி தேசிகன் இங்கே காட்டுகிறார்.

அந்த திவ்ய தம்பதியிடத்தில் லக்ஷ்மணர் ப்ரார்த்திக்கிறார்:

*குருஷ்வ மாமநுசரம் வைதர்ம்யம் நேஹ வித்யதே ।*
*க்ருதார்த்தோஹம் பவிஷ்யாமி தவ சார்த்த: ப்ரகல்ப்யதே॥*
(அயோ. கா. 31-22)

‘‘ரகுநந்தனரே! அடியேனையும் தங்களுடன் வருவதற்கு அனுமதிக்க வேண்டும். இதனால்

தர்மத்திற்கு எந்தவித பங்கமும் ஏற்படாது. இவ்வாறு தங்கள் திருவடியைப் பின்தொடர்ந்து கைங்கர்யம் செய்யும் பாக்யம் கிடைத்தால், அடியேன் க்ருதார்த்தன் (பெறவேண்டியதைப் பெற்றவன்) ஆவேன். தங்களுக்கு கைங்கர்யம் செய்வதாலேயே என் ஜன்மம் ஸாபல்யம் பெறும். ஆகையால், இந்தப் ப்ரார்த்தனையைத் தேவரீர் திருவுள்ளமுவந்து அங்கீகரிக்க வேண்டும்'' என்று விண்ணப்பித்தார். மேலும்,

*பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே।*
*அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ்ஸ்வபதச்ச தே ॥*
(அயோ. கா. 31-25)

''வைதேஹியுடன் கூடிய தேவரீர், சிறிதும் கவலையின்றி காடுகளிலும் மலைச்சிகரங்களிலும் ஸ்வதந்த்ரமாகவும் ஸந்தோஷமாகவும் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கலாம். தாங்கள் விழித்திருக்கும்போதும், உறங்கும்போதும், தங்களுக்குத் தேவையான எல்லாவித கைங்கர்யங்களையும் அடியேன் செய்து முடிப்பேன்'' என்று ப்ரார்த்தித்தார்.

சரணாகதியின் கரணமந்த்ரமாம் த்வயத்தின் அர்த்தத்தை லக்ஷ்மணரின் சரணாகதி ப்ரகரணம் மூலமாக மஹர்ஷி உபப்ருஹ்மணம் பண்ணுவதாக ஸ்வாமி தேசிகன் இங்கே மூலத்தில் அருளிச்செய்கிறார்.

த்வயத்தின் பூர்வார்த்தம் உபாயத்தைக் காட்டுகிறது. பிராட்டியுடன் கூடியிருக்கிற ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளைப் பற்றுவதே நமக்கு பரமோபாயம். இப்படி உபாயத்தை அநுஷ்டித்தால் நமக்கு வரக்கூடிய பலன் – கைங்கர்ய (இஷ்ட) ப்ராப்தி, ஸம்ஸார (அநிஷ்ட) நிவ்ருத்தி - இவ்விரண்டும் உத்தரார்த்தத்தில் தெரிவிக்கப்பட்டது.

இளையபெருமாள், ஸீதா ஸமேத ஸ்ரீராமனிடத்தில் பண்ணிய சரணாகதி உபாயாநுஷ்டானம். அதற்கு ஸித்தமாகிய பலனாக அந்த திவ்யதம்பதிக்கு காட்டில் இளையபெருமாள் பண்ணிய கைங்கர்யம் அமைந்தது.

இதே ப்ரகரணத்தை ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் -உத்தரக்ருத்யாதிகாரத்தில் காட்டுவது இங்கே அநுஸந்திக்கத்தக்கது.

**பரதாழ்வான் சரணாகதி**

அயோத்யாகாண்டத்தில், ஸ்ரீராமபிரானின் மற்றுமொரு திருத்தம்பியான பரதாழ்வானும் அவரிடத்தில் ப்ரபத்தியை அநுஷ்டித்தார். பரதாழ்வான் பண்ணிய சரணாகதியில் உள்ள ஸூக்ஷ்மார்த்தங்களை வெளிப்படுத்தி, அதனைக் குறித்து சிலருக்கு எழக் கூடிய கலக்கங்களுக்கு ஆசார்யன் இங்கே தெளிவான ஸமாதானத்தை அருளிச்செய்கிறார்.

சக்ரவர்த்தித் திருமகன், ஸீதா-லக்ஷ்மண ஸமேதராக அரண்யத்திற்கு எழுந்தருளினார். அவர் பிரிவாற்றாமையால் தசரத சக்ரவர்த்தி ஸ்வர்க ப்ராப்தி அடைந்தார். ராஜ்ய பரிபாலனத்தை ஏற்க மறுத்த பரதாழ்வான், ராமன் எழுந்தருளியிருந்த இடத்திற்கே சென்று ''என்னுடைய தாயார் தான் செய்த பெரும்பாவத்தின் பயனாக பயங்கரமான நரகத்தில் வீழப்போகிறாள். தேவலோகத்தில் இந்திரன் பட்டாபிஷேகம் செய்து கொண்டது போல, தேவரீரும் பட்டாபிஷேகம் செய்து கொண்டு எங்களை அநுக்ரஹிக்க வேண்டும். இந்த ப்ரபஞ்சம் இருக்கும் வரை தேவரீரே ராஜ்யசாஸனம் பண்ணவேண்டும். மூத்த புதல்வனுக்கே ராஜ்யம் என்கிற ந்யாயப்படி தங்களுக்கே உரிய அரசை ஏற்றுக்கொண்டு, எங்கள் அனைவரையும் மனோரதம் கிட்டியவர்களாகச் செய்ய வேண்டும். அடியேன் தேவரீருடைய ஸஹோதரன், சிஷ்யன், தாஸன். இங்குள்ள அமைச்சர்களோடு தலைவணங்கி ப்ரார்த்திக்கிறேன். ராஜ்யத்தை ஏற்று எங்களுக்கு அருள் புரிய வேண்டும்'' என்று கண்களில் நீர் சொரிய பெருமாளின் திருவடிகளில் சரணாகதி பண்ணினார்.

இளையபெருமாள் பண்ணிய ப்ரபத்தியை உத்தர க்ஷணத்திலேயே அங்கீகரித்த பெருமாள், பரதனுடைய ப்ரார்த்தனையை ஏற்று அவருடன் நாட்டிற்கு எழுந்தருளவில்லை; ராஜ்யத்தையும் அவர் கோலின காலத்தில் ஏற்கவில்லை. அப்பொழுது அவர் சரணாகதிக்கு பலஸித்தி ஏற்படாமல் போனதா என்ற ஸந்தேஹம் சிலருக்கு எழுவதுண்டு. இக்கேள்விக்கு நம் ஸ்வாமி:

''முற்பாடரான தேவர்கள் பண்ணின ப்ரபத்திக்காக ராவணவதத்திற்கு எழுந்தருளுகையும், பிற்பாடரான ஸ்ரீபரதாழ்வான் பண்ணின ப்ரபத்திக்காக மீண்டு(ம்) திருவபிஷேகம் பண்ணி ராஜ்யம் பண்ணுகையும் விருத்தமான படியாலே ஸ்ரீபரதாழ்வானுக்கு ப்ரபத்தி பண்ணினபோதே பரமபலம் சடக்கெனத் தலைக்கட்டிற்றில்லையேயாகிலும், அவருக்குக் கைகேயி வரத்தாலே ப்ரஸக்தமான அவத்யம் தீரும்படி, **மரவடியைத் தம்பிக்கு வான் பணையம் வைத்துப்போய் வானோர் வாழ** என்கிற படியே அப்போது ஸாக்ஷாத் பலமான திருவடிகளுக்கு ப்ரதிநிதியான ஸ்ரீசடகோபனாலே ஸபலத்வம் சொல்லி, பின்பு பூர்வப்ரதிக்ஞாதமான தேவகார்யம் தலைக்கட்டினவாறே ஸ்ரீபுஷ்பக விமானத்தாலே ஸாக்ஷாத் பலமான திருவடிகள் ஸ்வயமாகதங்களாய் அயத்ந லப்தங்களானபடி சொன்னான்'' என்று அத்யத்புதமாய் ஸமாதானம் ஸாதித்தருள்கிறார்.

முற்பாடு தேவர்கள், ராவணனிடமிருந்து தங்களைக் காத்தருளும்படி பெருமாளிடத்தில் சரணாகதி பண்ணியிருந்தார்கள். அந்தச் சரணாகதியை நிறைவேற்றுவதற்காகவே ராமாவதாரம் நிகழ்ந்து,

ராவணவதம் என்ற தேவகார்யம் ஸங்கல்பிக்கப் பட்டிருந்தது. (ராவண வதம் மூலமாக) தேவர்கள் ஸம்ரக்ஷணத்திற்காக ராமன் காட்டிற்கு எழுந்தருளினார். லக்ஷ்மணருடைய ப்ரபத்தி, இந்த திவ்ய ஸங்கல்பத்திற்கு விருத்தமாக அமையவில்லை. ஆகையால் அவருக்கு உடனடியாக பலஸித்தி ஏற்பட்டது.

ஆனால், பரதாழ்வானுடைய ப்ரார்த்தனை என்ன? ''இப்போதே நாட்டிற்குத் திரும்பி ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்பதே. இது தேவர்களுக்காக முன்பே ஸங்கல்பிக்கப்பட்டிருந்த தேவகார்யத்திற்கு விருத்தமாக இருந்தது. ஆகையால், அவரது சரணாகதி உடனடியாக அந்த வடிவில் பலன் அளிக்கவில்லை. இருப்பினும், அது பொய்த்துப் போகவில்லை; மாறாக விசேஷமாகவே பலித்தது.




# Vivaaha Sandesam

**(Free Matrimonial Column)**

**BRIDEGROOM WANTED**

Shadamarshana gothram, June 1994, Anusham, ht 5.3, Iyengar Vadakalai, BA BL Hons, ACS, Tax and Corporate Litigation Lawyer, Chennai.

Proficient in Carnatic music, Parents in Chennai, Looking for well-qualified boys, good family. 9444034491.

* * * * *

Shadamarshana gothram, June 1994, Anusham, ht 5.3, Iyengar Vadakalai, MBBS, PG Opthalmology DNB, pursuing Fellowship Superspeciality, Chennai.

Proficient in Carnatic music, Parents in Chennai, Looking for well-qualified boys, good family. 9444034491.


எப்படியென்னில்:

*மர அடியைத் தம்பிக்கு வான் பணையம் வைத்துப் போய் வானோர் வாழ*
*செரு உடைய திசைக் கருமம் திருத்தி வந்துலகாண்ட திருமால் கோயில்*
*திருவடி தன் திரு உருவும் திருமங்கை மலர் கண்ணும் காட்டி நின்று*
*உரு உடைய மலர் நீலம் காற்றாட்ட ஓ சலிக்கும் ஒளி அரங்கமே ॥*
(பெரியாழ்வார் திருமொழி 4-9-1)

ராமன் இருக்கும்போதே பரதன் அரசாண்டிருந்தால், ''ராஜ்யகாங்க்ஷி'' என்ற அவப்பெயர் அவனுக்குக் கிட்டும் ப்ரஸக்தி ஏற்பட்டிருக்கும். தன் தாயாரின் துராசையால் கிடைத்த அரசை அனுபவித்தவன் என்ற பழிச்சொல் உண்டாகியிருக்கும். இந்த அவத்யத்தை நீக்கியது அவன் பண்ணிய சரணாகதியே.

பரதனுடைய ப்ரார்த்தனை ராமன் மீண்டும் வந்து ராஜ்ய சாஸனத்தை ஏற்க வேண்டும் என்பதாகும். அதனைப் பெருமாள் தமது பாதுகைகள் மூலமாக முதலில் நிறைவேற்றினார். தாம் நேரில் திரும்பாதிருந்தாலும், தமக்கு ப்ரதிநிதியாகத் தம் திருவடிகளைத் தாங்கிய பாதுகைகளை பரதனிடத்தில் அருளிச் செய்தார். பாதுகைகள் வெறும் பிரதிநிதி அல்ல; அவை ''பணையம்'' (ப்ரதிபூ) ஆக அளிக்கப்பட்டன. உலகவழக்கில், வாங்கப்படும் பொருளைக் காட்டிலும் அதற்குப் பணையமாக வைக்கப்படும் பொருளுக்கே உயர்ந்த மதிப்பு உண்டு. ஆகையால், ஸ்ரீராமபிரானுக்கே ப்ரதிபூவாக அமைந்த திருப்பாதுகைகள் பரதனுக்குக் கிட்டியது, அவரது சரணாகதியின் விசேஷ பலஸித்தியாகவே கொள்ளவேண்டும்.

பின்னர், ராவணவதம் என்னும் தேவகார்யம் நிறைவேறியதும், பதினான்கு வருடங்கள் கழித்து, பரதாழ்வான் வேண்டியபடியே ஸ்ரீராமபிரான் அயோத்திக்குத் திரும்பி, ஸாக்ஷாத் ராஜ்ய சாஸனத்தை ஏற்றருளினார்.

ஆகவே, பரதாழ்வான் பண்ணிய சரணாகதி தாமதமாகப் பலித்ததே அன்றி, பொய்த்துப் போகவில்லை. முதலில் திருப்பாதுகைகளின் மூலம், பின்னர் ஸாக்ஷாத் ஸ்ரீராமபிரானின் பட்டாபிஷேகத்தின் மூலம், அது பூர்ண பலஸித்தியை அடைந்தது என்பதை ஸ்வாமி தேசிகன், பட்டர்பிரானின் பாசுரத்தைக் கொண்டு நிர்தாரணம் பண்ணியருள்கிறார்.

இவ்வாறு இளையபெருமாளும் பரதாழ்வானும் பண்ணிய சரணாகதிகளின் விசேஷாம்சங்களை எடுத்துக்காட்டி, சரணாகதி பண்ணினால் பலன் ஸித்தம் என்பதை ஸ்வாமி தேசிகன் நமக்குக் காட்டுகிறார்.

**(தொடரும்...)**

ஸ்ரீ:

கண்ணுக்கினியன





## கடை வெள்ளிக்கிழமை





## ப்ரஹ்மோத்ஸவம்













ப்ரஹ்மோத்ஸவம்











## ப்ரஹ்மோத்ஸவம்







ஸ்ரீ:



ப்ரஹ்மோத்ஸவம்









## ப்ரஹ்மோத்ஸவம்









ஸ்ரீ:





## ப்ரஹ்மோத்ஸவம்







ஸ்ரீ:

கண்ணுக்கினியன





ப்ரஹ்மோத்ஸவம்







ஸ்ரீ:



ப்ரஹ்மோத்ஸவம்












## ப்ரஹ்மோத்ஸவம்





ஸ்ரீ:



ப்ரஹ்மோத்ஸவம்









ஸ்ரீ:

கண்ணுக்கினியன





ப்ரஹ்மோத்ஸவம்







ஸ்ரீ:





## ப்ரஹ்மோத்ஸவம்














## ப்ரஹ்மோத்ஸவம்







ஸ்ரீ:







நம்மாழ்வார் திருநக்ஷத்ரம் - விடாயாற்றி புறப்பாடு













தோட்ட உத்ஸவம்






ஸ்ரீ:

கண்ணுக்கினியன





ஏகாதசி புறப்பாடு





ஸ்ரீ:

# மனமே பந்துவும் சத்ருவும்

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

*ஜ்ஞாந விஜ்ஞாந த்ருப்தாத்மா கூடஸ்த்தோ விஜிதேந்த்ரிய: ।*
*யுக்த இத்யுச்யதே யோகீ ஸமலோஷ்டாச்மகாஞ்சந: ॥*
(கீதை 6.8)

சாச்வதம் எது அசாச்வதம் எது என்ற தெளிந்த ஜ்ஞான விகாஸமுடையோர் பொன், பொருள், பூமி போன்றவற்றின் அஸ்திரத் தன்மையினை உணர்ந்து பஞ்சேந்த்ரியங்களின் வசப்படாதிருப்பர் என்கிறான் பார்த்தனின் ஸாரதி.

எம்பெருமானின் ஸ்பர்சம் அநுக்ரஹிக்கப்பட்ட திருமங்கை மன்னன் தனது பல பாசுரங்களில் பஞ்சேந்த்ரியங்களின் ஆளுமையில் இருத்தலின் ஆபத்தினைப் பற்றித் தெரிவிக்கிறார். சில உதாஹரணங்கள்: **புலன்கள் நைய** (பெரிய திருமொழி 1-3-9); **ஐம்புலன்கள் இடர் தீர எறிந்து** (பெரிய திருமொழி 6-2-4); **அளப்பு இல் ஐம்புலன் அடக்கி** (திருக்குறுந்தாண்டகம் - 18).

**வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால் நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன்** (பெரிய திருமொழி 1-1-1) என்றும் **இப்பிறப்பு அறியீர் இவர் அவர் என்னீர் இன்னது ஓர் தன்மை என்று உணரீர் நல் பொருள் காண்மின் பாடி நீர் உய்மின்** (பெரிய திருமொழி 1-1-7) என்பதாகவும் நாராயண நாமத்தினை திருமங்கை மன்னன் கொண்டாடும் போதில், மனத்தால் மற்றும் உணரீர் எனும் பதங்களின் மூலம் மனதின் ப்ராதான்யம் நிர்தாரணம் செய்யப்பட்ட விதம் நோக்கத்தக்கது.

**சஞ்சலம் அசஞ்சலம்**

பஞ்சேந்த்ரியங்களின் தூண்டுதலுக்கு அடிமையாகி மனதினை ஒருமுகப்படுத்தாமல் இருக்கும் வரை புருஷார்த்தத்தினை அடைவதென்பது துர்லபமே. தனது மனதினை அடக்கி ஒருமுகப்படுத்திப் போர் புரிய முடியாத பார்த்தனுக்கும் அவனது தேரோட்டியான பரப்ரஹ்மத்திற்கும் நடந்த ஸம்பாஷணை இதற்கு ப்ரபலமான உதாஹரணம்:

*சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம் ।*
*தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் ॥*
(கீதை 6.34)

என்று அர்ஜுனன் ஸ்ரீக்ருஷ்ணனிடம் கூறுகிறான். பஞ்சேந்த்ரியங்களின் வசப்படாது மனதினை அடக்குவதென்பது சாக்ஷாத் அந்த பரப்ரஹ்மத்துடன் தோழனாக வர்தித்த பார்த்தனுக்கே அகப்படாத வித்யையாக இருந்திருக்கிறது.

*அஸம்சயம் மஹாபாஹோ மநோ துர்நிக்ரஹம் சலம் ।*
*அப்யாஸேந து கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே ॥*
(கீதை 6.35)

ஒன்றை உறுதியாகப் பற்றிக் கொள்ளாமல் சஞ்சலப்பட்டுக் கொண்டே இருக்கும் மனதினை ஓரிடத்தில் நிறுத்துவது கடினம் தான் என்று பாரதந்த்ரியனான பார்த்தனின் கூற்றினை ஆமோதிக்கிறான் அவனது தேரோட்டியான ஸ்வதந்த்ரன்.

**பஞ்சேந்த்ரியங்கள் மனதின் எதிரி**

*அசோச்யாந் அந்வசோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவா தாம்ச்ச பாஷஸே।*
*கதாஸூந் அகதாஸூம்ச்ச நாநுசோசந்தி பண்டிதா:॥*
(கீதை 2.11)

இந்த ச்லோகத்தின் சுருக்கமான அர்த்தமாவது - ஜ்ஞானத்தில் சிறந்த அறிஞர்கள் உயிர் இல்லாதவற்றைப் பற்றியோ உயிருடன் இருப்பவற்றைப் பற்றியோ கவலைப்படமாட்டார்கள்.

**உயிர் இல்லாதது** - தேஹம் கர்மாக்களின் பலனாக உண்டாகும் விஷயம். கர்மானுகுணமாக அனைத்தையும் அநுபவித்தே தீர வேண்டுமென்பதனால் கவலைப்பட்டு ப்ரயோஜனமில்லை

**உயிர் உள்ளது** - ஆத்மா சாச்வதமானது. அழிவில்லாதது. எதனாலும் சேதப்படுத்த முடியாதது. எம்பெருமானது சொத்தான ஆத்மாவை அவன் திருவடிகளில் ஸமர்ப்பித்த பின்னர் (பர ந்யாஸம் / பர ஸமர்ப்பணம்) அதனைப் பற்றின கவலை அநாவச்யம்.

அசாச்வதமான தேஹம் அநுபவிக்க வேண்டிய கர்மாக்களுக்கேற்ப பஞ்சேந்த்ரியங்கள் செயல்பட்டு க்லேசத்தினை உண்டாக்குவதனால் அவை மனதிற்கு மட்டுமல்ல ஆத்மாவிற்கும் எதிரியாகின்றன.

**இந்த்ரிய ஜயமே பரமானந்தம்**

ஆழ்வார்களும் தமது பற்பல பாசுரங்களில் பகவத் விஷயமொழிய தங்களது வைராக்யத்தை அசைத்துப் பார்க்கக்கூடிய லோகாயதமான விஷயங்கள் தமக்கு வேண்டாமென்று பஹிஷ்கரிக்கின்றனர்.

*புலன் ஐந்து மேயும் பொறி ஐந்தும் நீங்கி*
*நலம் அந்தம் இல்லது ஓர் நாடு புகுவீர்*
*அலமந்து வீய அசுரரைச் செற்றான்*
*பலம் முந்து சீரில் படிமின் ஒவாதே.*
(திருவாய்மொழி 2-8-4)




**ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே
இரண்டு அறிவதுவே அதனொடு நாவே
மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே
ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிபடுத்தினரே
- தொல்காப்பியர்**

பஞ்சேந்த்ரியங்களின் பிடியில் ஆட்பட்டு அற்ப ஸுகங்களில் மூழ்கியிராது, மோக்ஷமெனும் புருஷார்த்தத்தை அடைவதற்கென சிந்தனையினை ஒருமுகப்படுத்தி எம்பெருமானின் திருக்குணங்களிலே அவகாஹித்து க்லேசத்திற்குக் குறைவில்லாத இப்புவியினை விடுத்து நீங்கி நலமந்தமிலாதோர் நாட்டினை அடைவீர் என்கிறார் நம்மாழ்வார்.

திருமங்கை மன்னன் இதனை உணர்த்தும் விதம் பேரழகு.

**ஆவியே! அமுதே! என நினைந்துருகி அவர் அவர் பணை முலை துணையா பாவியேன் உணராது எத்தனை பகலும் பழுதுபோய் ஒழிந்தன நாள்கள்** - பஞ்சேந்த்ரியங்களின் கட்டுக்குள்ளிருக்கும் மனமே ஆத்மாவிற்கு சத்ரு.

**சூழ் புனல் குடந்தையே தொழுது** - பஞ்சேந்த்ரியங்களின் கட்டுக்குள்ளிருந்து விடுபட்ட மனமே ஆத்மாவிற்கு பந்து.

(பெரிய திருமொழி 1-1-2)

*ஹே மர்த்யா: பரமம் ஹிதம் ச்ருணுத வோ வக்ஷ்யாமி ஸங்க்ஷேபத:*
*ஸம்ஸாரார்ணவமாபதூர்மி பஹுளம் ஸம்யக் ப்ரவிச்ய ஸ்திதா: ।*
*நாநாஜ்ஞாநமபாஸ்ய சேதஸி நமோ நாராயணாயேத்யமும்*
*மந்த்ரம் ஸப்ரணவம் ப்ரணாம-ஸஹிதம் ப்ராவர்தயத்வம் முஹு:॥*
(ஸ்ரீ முகுந்த மாலை - 18)

ஆபத்துகள் நிறைந்த ஸம்ஸார ஸமுத்ரத்தில் மூழ்கித் தத்தளிக்கும் கர்மபத்தர்களே! (பஞ்சேந்த்ரியங்களால் உண்டாக்கப்படும்) அஜ்ஞானத்தினை விடுத்து, பரம **ஹிதத்தினை அருளும் திருமந்திரத்தை மனதார மனனம் செய்யுங்கள்** என்று குலசேகரர் அறுதியிடுகிறார்.

**மனமே ஆத்மாவிற்கு பந்து**

*உத்தரேத் ஆத்மநாத்மாநம் நாத்மாநம் அவஸாதயேத் ।*
*ஆத்மைவ ஹ்யாத்மநோ பந்துராத்மைவ ரிபுராத்மந: ॥*
(கீதை 6.5)

அசஞ்சலமான மனம் ஸம்ஸாரத்திலிருந்து மீட்கும் என்பதனால் ஆத்மாவிற்கு பந்துவாகிறது. சஞ்சலம் மிகுந்த மனம் க்லேசத்தினை உண்டாக்குவதினால் ஆத்மாவிற்கு சத்ருவாகிறது.

*பந்துராத்மாத் மநஸ் தஸ்ய யேநாத்மைவாத்மநா ஜித: ।*
*அநாத்மநஸ்து சத்ருத்வே வர்தேதாத்மைவ சத்ருவத் ॥*
(கீதை 6.6)

மனதை வென்றவனுக்கு அதுவே பந்து. வெல்லாதவனுக்கோ அதுவே சத்ரு.

மற்றெனக்கிங்கு ஆராய்வாரில்லை அழல்வாய் மெழுகு போல்

*நீராய் உருகும் என்னாவி நெடுங்கண்கள் ஊரார்*
*உறங்கிலும் தானுறங்கா உத்தமந்தன் பேராயினவே*
*பிதற்றுவன் பின்னையும் காரார் கடல் போலும்*
*காமத்தராயினார் ஆரே பொல்லாமை அறிவார்...*
(சிறிய திருமடல் 31 to 33)

என் ஆத்ம வஸ்து தணலில் உருகும் அரக்கினைப் போல உருகிற்று. அனைவரும் உறங்கும் வேளையில் அடியாளது கண்கள் மட்டும் உறக்கம் கொள்ளவில்லை. எம்பிரானது ஆயிரம் திருநாமங்களை பிதற்றியவாறு இருக்கிறேன். இப்படி பதற்றமுறுவது ஸ்வரூபஹாநியென்று கூறுவோர், அற்ப விஷயங்களில் காமம் **(மனமே ஆத்மாவிற்கு சத்ரு)** கொள்பவரேயன்றி, ஸ்வரூப ஜ்ஞானத்தினாலேயே எம்பெருமான் மேல் காமமுண்டாகும் **(மனமே ஆத்மாவிற்கு பந்து)** என்பதை அறியாதவரே என்று பரகாலநாயகி பாவத்தில் ஸேவிக்கிறார் ஆழ்வார்.

ஸ்வரூப ஜ்ஞானம் கொண்டோரது ஆத்மா எம்பெருனுடனான விச்லேஷத்தினால் படும் பரிபவத்தினை தெளிவுற விளக்கும் பதங்கள் இவை. பஞ்சேந்த்ரியங்களால் எழும் அல்ப ஆசைகள் உண்டாக்கும் க்லேசங்களைப் போன்றதல்ல எம்பெருமானுடன் கூடல் உண்டாகாத போதில் ஆத்மாவிற்கு உண்டாகும் அநுபவம்.

**ஆழ்வார்கள் ஆண்ட மனம்**

மனமானது ஆத்மாவிற்கு எவ்விதத்தில் பந்துவாகிறது எப்படி சத்ருவாகிறது என்று பற்பல திருமாலை பாசுரங்களின் மூலம் காண்பிக்கிறார் தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

- உண்டிராக் கிடக்கும் போதும் உடலுக்கே கரைந்து நைந்து (5) - **மனமே ஆத்மாவிற்கு சத்ரு**
- புந்தியுள் புகுந்து தன்பால் ஆதரம் பெருக வைத்த அழகன் (16) - **மனமே ஆத்மாவிற்கு பந்து**
- இரும்பு போல் வலிய நெஞ்சம் இறையிறையுருகும் வண்ணம் சுரும்பமர் சோலை சூழ்ந்த அரங்கமா கோயில் கொண்ட கரும்பினைக் கண்டு கொண்டு (17) - **மனமே ஆத்மாவிற்கு பந்து**
- எங்கள் மால் இறைவன் ஈசன் கிடந்ததோர் கிடக்கை கண்டும் எங்கனம் மறந்து வாழ்கேன் (23) - **மனமே ஆத்மாவிற்கு சத்ரு**
- கள்ளமே காதல் செய்துன் கள்ளத்தே கழிக்கின்றாயே (24) - **மனமே ஆத்மாவிற்கு சத்ரு**
- காதலால் நெஞ்சமன்பு கலந்திலேனது தன்னாலே (26) - **மனமே ஆத்மாவிற்கு சத்ரு**
- மனத்திலோர் தூய்மையில்லை (30) - **மனமே ஆத்மாவிற்கு சத்ரு**
- நின்னைச் சிந்தையுள் திகழ வைத்து மருவிய மனத்தராகில் (40) - **மனமே ஆத்மாவிற்கு பந்து**

சுத்த ஸத்வ வஸ்துவாகும் ஆத்மா கரை சேர்வதற்கு மனமும் அதன் சிந்தனையும் இன்றியமையாதது. நித்யமெது அநித்யமெது என்று ஆழ்வார்கள் தத்தம் நெஞ்சினிடத்தே அழுந்தக் கூறினர் என்பதற்கு உதாஹரணங்கள் பலப்பல.

- **உளன் கண்டாய் நல்நெஞ்சே உத்தமன் என்றும் உளன் கண்டாய்** - (பொய்கையாழ்வார் - முதல் திருவந்தாதி - 99)
- **உறும் கண்டாய் நல் நெஞ்சே** (பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி - 77)
- **கழல் தொழுதும் வா நெஞ்சே** (பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி - 7)
- **இலைதுணை மற்றுஎன் நெஞ்சே** (திருமழிசை ஆழ்வார் - நான்முகன் திருவந்தாதி - 8)

திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழியில் இடைவிடாது தனது மனதுடன் ஸம்பாஷணை செய்திருப்பதற்கான உதாஹரணங்கள்:

- **பிரிதி சென்று அடை நெஞ்சே** (முதல் பத்து - இரண்டாம் திருமொழி)
- **சாளக்கிராமம் அடை நெஞ்சே** (முதல் பத்து - ஐந்தாம் திருமொழி)
- **மணிமாடக் கோயில் வணங்கு என் மனனே** (மூன்றாம் பத்து - எட்டாம் திருமொழி)
- **வைகுந்த விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே** (மூன்றாம் பத்து - ஒன்பதாம் திருமொழி)
- **அரிமேய விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே** (மூன்றாம் பத்து – பத்தாம் திருமொழி)
- **நறையூர் நாம் தொழுதும் எழு நெஞ்சமே** (ஆறாம் பத்து - நான்காம் திருமொழி)
- **திருமாலிருஞ்சோலை வணங்குதும் வா மட நெஞ்சே** (ஒன்பதாம் பத்து - எட்டாம் திருமொழி)

**மனமே மாதவனை மனனம் செய்**

*ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்வத: ।*
*த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாம் ஏதிஸோர்ஜுந ॥*
(கீதை 4.9)

என்னுடைய அப்ராக்ருதமான ஜன்மம் கொள்ளுதலையும் செயல்களையும் எவனொருவன் மனமார அநுஸந்திக்கிறானோ அவன் புநர்ஜன்மம் கொள்ளாது என்னையே அடைகிறான் என்பது கீதாசார்யனின் திருவாக்கு.

பரப்ரஹ்ம ஸ்வரூபியாகும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அடைவதே புருஷார்த்தம். **உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவனை அல்லால்** என்று திருவாய்மொழியில் (4-6-10) தாய் பாவத்தில் ஸாதிக்கிறார் நம்மாழ்வார். ஆடியாடி அகம் கரைந்து **(மனமே ஆத்ம பந்து)** இசை பாடிப் பாடிக் கண்ணீர் மல்கி **(ஸத்ய ஜ்ஞானம்)** வாடிவாடும் இவ்வாணுதலே **(ஆத்மாவின் பரிபவம்)**. எங்கும் நாடி நாடி நரசிங்காவென்று அவனடி பணிந்து உபாயமாகும் அவனிடமே ப்ரார்த்தித்து உபேயமாகும் அவனையே அடைவோம். ❋

**Sponsorships and donations towards publication expenses are welcome**

# கண்ணனின் காதல்

ஸ்ரீ உ.வே. பழவேரி சக்ரவர்த்தி ரா. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி, பெங்களூரு

தலைப்பு ஸ்வாமி நம்மாழ்வாரைக் குறிக்கின்றது. ஸ்ரீபட்டர் பெருமான் ஸ்வாமி நம்மாழ்வாரை **க்ருஷ்ண த்ருஷ்ணா தத்வம்** என்றார். இச்சொற்றொடரிலுள்ள **க்ருஷ்ண த்ருஷ்ணா** என்ற சொல்லுக்குக் **கண்ணனின் காதல்** மற்றும் **கண்ணனிடத்தில் காதல்** என்ற இரண்டு பொருள் கிட்டும். எம்பெருமான் தன்னை அந்தராத்மாவாக எண்ணுபவர்களைத் தானும் தனக்கு அந்தராத்மாவாக எண்ணுபவன்; எம்பெருமானிடத்திலே ஒரு ஜீவன் தன்னையும் தன்னைச் சேர்ந்தவற்றையும் ஸமர்ப்பித்தால் எம்பெருமானும் அவர்களுக்கு தன்னையும் தன் விபூதியையும் அனுபவிக்கக் கொடுப்பவன்; தான் சாஸ்த்ரங்களிலே ஏவின செயல்களை அன்புடன் அனுஷ்டிப்பவர்கள் எம்பெருமானை ஏவினால் (வேண்டினால்) அவர்கள் ஏவின செயல்களைச் செய்துமுடிப்பவன் என்று ஸ்வாமி தேசிகன் எம்பெருமான் குணங்களைப் பல ப்ரமாணங்களைத் திருவுள்ளத்தில் கொண்டு பட்டியலிட்டு அனுபவிக்கிறார். ஆதலால் கண்ணனிடம் அளவுகடந்த காதல் கொண்ட ஸ்வாமி நம்மாழ்வாரிடம் கண்ணனும் அளவுகடந்த காதல் உடையவனாய் இருப்பவன் என்பதில் ஐயமென்! ஆழ்வார் எம்பெருமானே தனக்கு தாரகம், போஷகம் மற்றும் போக்யம் என்றிருப்பவர். இதை **உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்** என அருளிச்செய்ததால் அறியலாம். மனிதனுக்கு அன்னம் தாரகம். ஏனெனில் அதின்றி வாழமுடியாது. குடிக்கும் நீர் போஷகம். ஏனெனில் அதின்றி ஆரோக்யம் கெடும். நாம் பருகும் நீரே நமக்கு ஊட்டம் கொடுக்கிறது. சோற்றைத் தின்று தண்ணீர் பருகியவனுக்கே



வெற்றிலை (தாம்பூலம்) போக்யமாகும். சோறும் நீரும் கிட்டாமல் வாடியவயிற்றனுக்கு வெற்றிலையால் ஆவதென்!

ஆகுக! ஆழ்வார் பாசுரத்தில் உண்ணும், பருகும் மற்றும் தின்னும் என்கிற சொற்கள் எங்ஙனம் தாரகம் போஷகம் மற்றும் போக்யம் என்ற பொருளைத் தரும் என்று எண்ணலாம். இச்சொற்கள் நிகழ்காலச் சொற்களாய் பயன்படுத்தப்பட்டுள்ளதால் அப்பொருட்களைத் தருகின்றன. பாத்திரத்தில் இருக்கும் சோறு தாரகம் ஆகாது; பசியுடன் சாப்பிடும்போதே சோறு தாரகம் ஆகும். பசி போனால் பரமான்னமும் சுவையற்றுப்போகும் அல்லவா! கிணற்றிலோ சொம்பிலோ இருக்கும் நீர் போஷகம் ஆகாது. தாகத்தால் அதைக் குடிக்கும்போதே அது போஷகம் ஆகும். தாகம் தீர்ந்தபின் நீரை மக்கள் பருக விரும்பார் அல்லவா! அவ்வாறே கொடியில் இருக்கும் வெற்றிலை போக்யமாகாது; சோறு தின்று நீர் பருகிய பின் மனதில் அமைதியும் இருக்கும்போதே தாம்பூலம் போக்யமாகும் அல்லவா! ஆகையால் நிகழ்கால அடைமொழிகள் தாரகம், போஷகம் மற்றும் போக்யம் என்ற பொருட்களைக் குறிப்பால் உணர்த்தின.

ஸ்வாமி நம்மாழ்வார் கண்ணனிடத்தில் கொண்ட காதலை (பக்தியை) வேறு யாரும் இதுவரை எட்டவில்லை. கண்ணனின் நீர்மையை எண்ணி பகல்கண்ட குழியிலே இராவிழுவாரைப்போலே பலமுறை ஆறு மாதங்கள் மோஹித்துக் கிடந்ததாக ஐதிஹ்யம் அறிகிறோம். **காதல் கடல் புரைய விளைவித்த காரமர்மேனி நங்கண்ணன் என்றும் கொண்ட என் காதல் உரைக்கில் தோழீ! மண்டிணி ஞாலமும் ஏழ்கடலும் நீள்விசும்பும் கழியப்பெரிதால்** என்றும் ஆழவார் தாமே அருளிச்செய்தார் அல்லவா! ஆகுக! இக்கட்டுரையில் ஆழ்வாருக்குக் கண்ணனிடத்தில் இருந்த காதலை மேற்படி பாசுரங்களைக் கொண்டு அனுபவிப்பதை விடுத்து, கட்டுரையின் தலைப்புக்கிணங்க கண்ணனுக்கு ஆழ்வார் விஷயத்தில் இருந்த அளவுகடந்த அன்பைப் பற்றி மட்டும் இப்போது காண்போம்.

எம்பெருமானுக்கு ஆழ்வார் உண்ணும் சோறாயும் பருகுநீராயும் தின்னும் வெற்றிலையாயும் இருந்தை திருவாய்மொழி ஒன்பதாம் பத்து திருக்காட்கரை தசகத்தில் அறியலாம். தனக்கு எம்பெருமான் தாரக-போஷக-போகயம் என்பதைக் கூற ஒரு வாக்கியம் அருளிச்செய்த ஆழவார், பகவானுக்குத் தான் உண்ணும் சோறாய், பருகு

நீராய், தின்னும் வெற்றிலையாய் இருப்பதைக் கூற ஒரு பதிகம் அருளிச்செய்துள்ளதைக் கூர்ந்து பார்த்து எம்பெருமானின் குணத்தில் நாம் ஆழவேண்டும்.

இப்பதிகத்தில் முதலில் பகவானுக்கு ஆழ்வார் உண்ணுஞ்சோறானதைக் கூறுவதை **என்னுயிராய் என்னுயிருண்டான், சிறியவென்னாருயிருண்ட திருவருள், என்னுள் புகுந்து உருவமும் ஆருயிரும் உடனே உண்டான், அங்கண்ணனுண்ட என்னாருயிர், என்னுயிருண்ட மாயன், என்னுயிர் தானுண்டான்** என்ற பல பாசுரங்களில் **உண்ணுதல்** என்ற சொல்லை மீண்டும் மீண்டும் பயன்படுத்திக் காட்டியதால் அறியலாம். இப்பாசுரங்களில் உண்ணுதல் என்பது அனுபவித்தல் மற்றும் தாரகமாய் இருத்தல் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதை உரைகளைக் கொண்டு அறியலாம். பெரியதிருவந்தாதியில் **கணைநாணில் ஓவாத் தொழில் சார்ங்கன் தொல்சீரை நன்நெஞ்சே! ஓவாத ஊணாக உண்** போன்ற நம்மாழ்வாரின் சொல்லாட்சியும் இங்கே சேர்த்து அனுஸந்திக்கத் தக்கது.

இப்பதிகத்தில் பகவானுக்கு ஆழ்வார் பருகுநீரானதை,

*வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணிலென்று*
*ஆர்வுற்ற என்னையொழிய என்னில் முன்னம்*
*பாரித்துத் தான் என்னை முற்றப் பருகினான்*
*காரொக்கும் காட்கரையப்பன் கடியனே.*

என்ற பாசுரத்தால் அறியலாம். இதில் உயிரான சொற்கள் **விழுங்குவன்** மற்றும் **பருகினான்** என்ற சொற்களாம். ஆழ்வார் எம்பெருமானிடமிருந்த பேராவலால் அவனை வாரிவிழுங்க எண்ணிய போது அவரிலும் பாரித்தான் எம்பெருமான். பாரித்து என்ற சொல்லை இரண்டிடத்திலும் கூட்டிக்கொள்ள வேண்டும். அதாவது **என்னில் பாரித்து, முன்னம் பாரித்து** என்று கூட்டிப்பொருள் கொள்ள வேண்டும். இதனால் ஆழ்வாரின் பாரிப்பை விட எம்பெருமானின் பாரிப்பு அதிகம் இருந்ததையும், ஆழ்வார் பாரிக்க எண்ணியதற்கு முன்பே எம்பெருமான் ஆழ்வாரை அனுபவிக்கப் பாரித்ததையும் உணரலாம்.

நாம் சோற்றை விழுங்குகின்றோம்; அதைப் பருகுவதில்லை. நாம் நீரைப் பருகுகின்றோம்; அதை விழுங்குவதில்லை. ஆழ்வார் தான் கண்ணனைக் குறித்து, அவனை விழுங்கப்போவதாகக் கூற, அக்கணமே பாரித்த எம்பெருமான் ஆழ்வாரை முழுமையாகப் பருகிவிட்டான் என்கிறார் பாசுரத்தில். இங்கு ஒரு நுண்ணிய விஷயத்தை பாசுரத்தில் காணலாம். பசியை விட தாகம் கொடிது. ஆகையால் பசியைப் பொறுத்துக்கொள்ளும் அளவில் தாகத்தைப் பொறுத்துக்கொள்ள இயலாது. ஆகையால் பசி எடுத்தவனுக்கு உணவை உண்ண வேண்டி ஏற்படும் பாரிப்பை விட தாகம் எடுத்தவனுக்கு நீர்பருக ஏற்படும் பாரிப்பு அதிகம் ஆகும். ஆகையால் தான் எம்பெருமானை விழுங்க எண்ணியபோது அவன் தன்னைப் பருக்கினான் எனக் கூறியது பகவானுக்கு இருந்த அதிக பாரிப்பைக் காட்டுகின்றது.

மற்றுமொரு சொல்லாட்சியை உற்று நோக்கவேண்டும். **விழுங்குவன்** என்ற சொல் எதிர்காலச் சொல்லாய் இருக்க பருகினான் என்ற சொல் இறந்தகாலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது ஆழ்வார் உன்னை உண்ணப்போகிறேன் என்றவாறே அவன் ஆழ்வாரைக் குடித்து முடித்துவிட்டான் என்பது இதனால் கூறப்பட்டு எம்பெருமானுக்கு இருந்த அதிக பாரிப்பை ஆழ்வார் காட்டினார். அம்மம்ம! ஒரு சிறிய பாசுரத்தில்தான் எவ்வளவு பொருட்செறிவு!

இப்பாசுரத்திலுள்ள மற்றுமொரு சொல்லைக் காண்போம். அச்சொல் **கடியன்** என்றதாம். உலகவழக்கில் இச்சொல் வன்மை மிக்கவன் – கடுமை மிக்கவன் என்ற பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் இச்சொல் அப்பொருளில் இப்பாசுரத்தில் பயன்படுத்தப்படவில்லை. பின்பு விரைவாக செயல்படுபவன் – த்வரிப்பவன் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. மேல் பாசுரத்தில் ஒருகணத்தில் கஞ்சனைக் கொன்றதை **கடியனாய்க் கஞ்சனைக் கொன்றபிரான்** என்றார் அல்லவா! ஸ்ரீபெரியாழ்வாரும் காற்றில் **கடியனாய் ஓடி** (காற்றைவிட விரைவாக ஓடி) என்று விரைபவன் என்ற இப்பொருளில் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளதும் காணலாம்.

ஆகையால் ஆழ்வார்கள் போன்ற பரமைகாந்திகள் விஷயத்தில் எம்பெருமானின் அன்பு அளவுகடந்தது என்பதும் அவன் அவர்களை அடைய அதிகம் த்வரிப்பவன் என்பதும் ஆழ்வாரால் காட்டப்பட்டது. இப்பதிகத்தையும் அதிலும் இப்பாசுரத்தையும் திருவுள்ளத்தில் கொண்டே எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்தில் **தனக்கு அத்யர்த்த ப்ரியனான ஜ்ஞானியைப் பெற்று ஒருக்காலும் (வைகுண்டத்திலிருந்து) திரும்ப அனுப்பமாட்டான்** என்று அருளிச்செய்தார். ப்ரியனான ஜ்ஞானியை என்னாதே அத்யர்த்த ப்ரியனான ஜ்ஞானியை என எம்பெருமானார் அருளிச்செய்தது இத்தகைய பாசுரத்தின் தாக்கத்தாலேயே ஆகும்.

இதனால் ஆழ்வாரையும் ஆழவார் போன்றவர்களையும் எம்பெருமான் **உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லா**மாய் எண்ணுபவன் என்பது காட்டப்பட்டது. மற்றும் **கண்ணனின் காதல்** எத்தகைய பெருமையுடையது என்பதையும் சற்று அறிந்தோம்.

ஸ்ரீ:

# உவந்த உள்ளத்தன்

Dr. ஸ்ரீமதி ஹேமா ராஜகோபாலன், பெங்களூரு

**கோதற்ற நான்மறை மௌலியின் ஆசிரியன் குறித்தான் காதற் துணிவுடையார் கற்கும் வண்ணம் கருத்துடனே** என்பது ஸ்வாமி தேசிகன் அருளிசெய்த கீதார்த்த ஸங்க்ரஹம் என்னும் ப்ரபந்தத்தின் நிறைவுப் பாசுரமாகும். இதன் கருத்தாவது:

இந்த ப்ரபந்தத்தின் ஆசிரியரான ஸ்வாமி நிகமாந்த மஹா தேசிகன் கீதையில் சொல்லப்பட்டுள்ள பக்தி, ப்ரபத்திகளை நன்கு பயின்று அறியுமாறு ஸ்ரீ ஆளவந்தார், ஸ்ரீ பாஷ்யகாரர் போன்றோர் ஸாதித்தருளிய கருத்துகளில் சிறிதளவும் மாறுபடாமலும், மேலும் அவர்கள் உகக்கும் வண்ணமும் இந்த கீதா சாஸ்த்ரத்தை ஸேவிப்பவர்களுக்கு மிக அன்புடன் இப்ரபந்தத்தில் விவரித்துள்ளார் என்பது. அதாவது விசிஷ்டாத்வைத வேதாந்தத்தை நம் பூர்வாசார்யர்கள் உரைத்த வண்ணமே மடைப்பள்ளி வந்த மணம் சிறிதும் மாறாதபடி பின்புள்ளோரும் தெளிவாக அறியும் வண்ணம் நன்கு பரிமாறினார் என்பது இவ்விடத்தில் அழகாகச் சொல்லப்பட்டது.

இதற்கு உதாரணமாக சிலவற்றைக் காணலாம்.

*தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதி பூர்வகம் ।*
*ததாமி புத்தி யோகம் தம் யேந மாமுபயாந்திதே ॥*
(பகவத் கீதை 10-10)

ச்லோகத்தின் பொருள்: ‘‘என்னுடனேயே எப்பொழுதும் சேர்ந்திருக்கவேண்டும் என்று விரும்பி என்னை பஜிப்பவர்களுக்கு என்னை அடைவதற்கு ஸாதனமான முதிர்ந்த பக்தியை நானே அன்புடன் கொடுக்கிறேன்.’’

ப்ரீதி பூர்வகம் என்பதற்கு அன்புடன் என்று பொருள். இது ஒரு வினை உரிச்சொல் (Adverb). இது இந்த ச்லோகத்தில் உள்ள இரு வினைச்சொற்களுக்கும் (பஜதாம், ததாமி) பொருந்தும், ‘அன்புடன் பஜிப்பவர்களுக்கு’ என்றும் ‘அன்புடன் அளிக்கிறேன்’ என்றும் இரு இடங்களிலும் பொருந்தும் வண்ணம் உள்ளது! ச்லோகத்தை அந்வயம் செய்து பொருள் கொள்ளல் வேண்டும். பகவானை பூஜிக்கும் பக்தன்,



பலனைத்தரும் பகவான் என்னும் இவ்விருவரில் அன்புடன் என்னும் வினை உரிச்சொல்லை யாருடன் இணைப்பது என்பது இங்கு எழும் கேள்வி!

ஸ்வாமி தேசிகன், தாம் அருளிச்செய்த உபகார ஸங்க்ரஹம் என்னும் ரஹஸ்ய க்ரந்தத்தில் ஸாதநாதிகாரம் என்னும் இரண்டாம் அத்யாயத்தில் இதற்கு விடையளிக்கிறார்! எம்பெருமானை அடைவதற்குள்ள பக்தி, ப்ரபத்தி ஆகிய இரு உபாயங்களில் ஒருவன் பக்தியோகத்தை ஏற்று அதில் இழியும் பொழுது அவனுக்கு எம்பெருமான் செய்யும் உபகாரங்களைச் சொல்லி அவ்விடத்தில் 'ப்ரீதி பூர்வகம் ததாமி' என்பதை விளக்கி அருள்கிறார்! பக்தனுக்கு அன்புடன் பகவான் அருள் செய்கிறான் என்கிறார்!

சங்கர, மத்வ பாஷ்யங்களில் ப்ரீதியோடு (த்யானிப்பவர்கள்) பஜிப்பவர்களுக்கு என்னும் பொருள்பட 'ப்ரீதி பூர்வகம் பஜதாம்' என்று இணைத்து அன்புடன் என்னும் வினை உரிச்சொல்லை பக்தி செய்பவனுக்கு இடுகிறார்கள்! இவர்கள் இவ்விதம் வ்யாக்யானம் இட்டிருக்க, ஸ்ரீ பாஷ்யகாரரோ தம் கீதா பாஷ்யத்தில் பகவான் ப்ரீதியோடு அவர்களுக்கு வேண்டுவன அனைத்தையும் அளிப்பதாக விவரித்துள்ளார்.

ஸ்ரீ கீதாபாஷ்யத்தை விரித்தருளும் தாத்பர்ய சந்திரிகையில் ஸ்வாமி தேசிகனும் இதனை ஆமோதித்து விளக்கியதுடன் ப்ரீதி பூர்வகம் ததாமி என்பதை எம்பெருமான் நமக்குச் செய்யும் ஓர் உன்னதமான உபகாரமாகவும் காட்டியருளுகிறார்!

ஸ்வாமி நம்மாழ்வாரும் இக்கருத்தையே பலவிடங்களிலும் வெளியிட்டருளுகிறார். எம்பெருமானை அடைவதில் இவனுக்கு உண்டான ஆர்த்தியைக் காட்டிலும் ஜீவாத்மாவை அடைய அப்பெருமானுடைய ஆர்த்தி மிக அதிகம் என்கிறார்! 'வாரிக்கொண்டு அவனை விழுங்க ஆர்வுற்று' தாம் (ஆழ்வார்) காத்திருக்கையில் அப்பெருமானோ 'என்னில் முன்னம் பாரித்து' தான் என்னை முற்றப் பருகிவிட்டான் என்று பாடுகிறார்!

'அறியேன் மற்றருள்' எனத் தொடங்கும் பாசுரத்திலும் (8-7-8) 'அருள் செய்வர் செய்வார்கட்கு உகந்து' என்று பாடுகிறார்! எம்பெருமான் தான் அருள் செய்ய நினைந்தவர்கட்கு உகந்து (ப்ரீதி பூர்வகம்) அருள் செய்வதாக ஆழ்வார் இவ்விடத்தில் அருளிச்செய்கிறார்.

உலகில் பொதுவாக தானம் செய்பவர்கள் பெரும்பாலும் வெறுப்புடனும் முழு மனதின்றியும் சில



கட்டாயத்தின் பேரிலும் கூட தானம் செய்வதை நாம் காண்கிறோம் ஆனால் எம்பெருமானோ அங்ஙனமின்றி ஸத்பாத்திரத்தில் கொடுக்கப் பெற்றோமே என்று மகிழ்ந்து உவந்த உள்ளத்தோடு கொடுக்கிறான் என்றும் இது அவனுடைய எண்ணற்ற திருக்கல்யாண குணங்களில் ஒன்று என்பதும் நம் பெரியோர்கள் காட்டும் கருத்தாகும்.

ஸ்வாமி தேசிகன் பழமறையின் பொருளெனப் பாண்பெருமாள் பாடித்தந்த அமலனாதிபிரானை விரித்துரைக்கும் காலத்திலும் இக்கருத்தை வெளியிடுகிறார்! 'உவந்த உள்ளத்தனாய்' என்னும் போதும் 'கோரமாதவம் செய்தனன்' எம்பெருமான் என்னும் போதும் இவ்விடங்களை விரித்துரைக்கும் ஆசார்யரின் திருவுள்ளக்கருத்து, 'ப்ரீதி பூர்வகமாகக் கொடுப்பவன் எம்பெருமானே' என்பதை நாம் உணரலாம்.

நிறைவாக, ஸ்வாமி தேசிகன் 'எந்த அந்வயத்தில் (உரிச்சொல்லை இணைக்கும் காலத்தில்) பகவானுடைய அற்புதமான கல்யாண குணம் வெளிப்படுகிறதோ அந்த அந்வயம் தான் சிறந்தது எனக் கொள்ளவேண்டும்' என்றும் நமக்கு போதித்தருள்கிறார்! எனவேதான் தாத்பர்ய சந்த்ரிகையில் 'பஜதாம் ப்ரீதி பூர்வகம்' என்பதைத் தவிர்த்து 'ப்ரீதி பூர்வகம் ததாமி' என்று அந்வயம் கொள்ளல் வேண்டும் என்று ஸ்ரீ கீதா பாஷ்யத்தை ஒட்டி விளக்கியருள்கிறார். இதுவே ஸஹ்ருதயர்களின் பாணியும் பணியுமாகும்.

ஶ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (39)

## Periyazhwar's In-Advance Submission To Arangan

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

The aura and grandeur of Lord Ranganatha and Ranga Naachiyaar can only be felt and not easily be described in words. The nostalgia of the occasion would be too overwhelming for those who have had the taste of worshipping them.

What has given such an exalted and unique status to Srirangam? The reasons are innumerable. To list a few, Lord Ranganatha is celebrated as 'Periya Perumal'. He is the Lord held as treasure of the Ikshvaahu clan (gifted by Brahma) and was worshipped by Sri Rama Himself. He is the only Lord whom all the Azhwars have sung. He is the Lord credited with the maximum number of Pasurams as Mangalaasaasanam by Azhwars. The Pranavaakaara Vimanam is a great pride of the temple. The Divyadesam is the chosen and cherished place of stay of many an Acharya. It is the abode of the evolution of the Sampradaya and a major hub of Srivaishnava activities.

We are all aware that the cardinal principle of our Sri Sampradayam so thoroughly propounded with profundity by Sri Ramanuja and established ingeniously by Swami Desika is 'Self Surrender'. Put in simple terms, it is about reserving a place in the Lord's abode (Sri Vaikunta) in advance.



Shifting the burden of responsibility squarely on the Lord is an inherent element of the Principle of Surrender. Periyazhwar showed the way in the decad 'Thuppudaiyaarai' (Periyazhwar Thirumoshi 4-10). In a classic expression of solemn and powerful appeal, the Azhwar puts the onus of saving him in his final days on the Lord of Arangam.

Swami Desika, ever one to faithfully tread the path shown by great sages, Azhwars and Poorvacharyas, embellished the Sampradaya with his incomparable works. In the fourth Sloka of Nyasa Dasakam he submits thus: "O! Consort of Sri, grantor of desired boons (Abhishta Varada!), I have surrendered to You; please lead me to Your feet when I am done with this body (after death)".

We shall have a look at Periyazhwar's outpourings in this Note.

- It is with the intent of being helped in times of need that one befriends competent persons. I am unworthy, yet I surrendered unto You because You saved the elephant Gajendra when he was in distress. I will not (be able to) meditate on You when inflicted by illness. Hence, this prayer of mine in advance, O Lord of Srirangam reclining on a serpent couch!
- You must make it a point to remember me when I die. For You are capable of not letting the thought about You entering the mind when Yama's messengers come and torture me with twisted tongues. Hence, now itself I am letting You know this, O bearer of the conch and discus and Lord of Srirangam reclining on a serpent couch!
- When I approach the entrance of the nether world and Yama's men beat and grab me, I will have no power then to say ""stop!' Hence I prate Your names whenever I can here and now. You must all the time bear me in mind and save me from miseries, O bearer of the discus and conch and Lord of Srirangam reclining on a serpent couch!
- Lord whose greatness even Siva and Brahma

cannot comprehend! You are the first cause of all the worlds, and one who became the three-syllabled Pranava Manthra! When Yama's agents think that 'this is the end of his life' and come and grab me forcefully, You must come and rescue me from them, O Lord of Srirangam reclining on a serpent couch!

- Supreme Lord reclining on Adhi Sesha in the Milky Ocean! In order to create the world You made Brahma out of Your lotus navel. Knowing that the people on earth are mortal in nature, You created Yama too at once. Hence, You must protect me, O Lord of Srirangam reclining on a serpent couch!
- Lord who became the earth, water, fire, air and space! Merciless men of Yama will sure torture me. Hence I have recalled Your names whenever I can here and now. You must all the time bear me in mind and save me, O my Master and Lord of Srirangam reclining on a serpent couch!
- Substance of the Vedas, Lord of gods and my Master, my Infinite Ambrosial delight, Lord of the seven worlds and my Father! When Yama's agents take furtive forms and try to grab and torture me, You must say ""Fear not!" and save me, O Lord of Srirangam reclining on a serpent couch!
- Lord of Vaikunta, Lord of Celestials, Mathura-born Wonder Kid, my Elephant Darling! I can hardly understand any of Your mysteries. When Yama's men torture me I shall not be remembering



You. You must nonetheless protect me, O Lord of Srirangam reclining on a serpent couch!

- Lord who held aloft the Govardhana mountain and saved cattle, Cow-herd Lord and my Master! Right from the start to the present day I have not once forgotten Your greatness. Hence You must protect me from the agents of Yama when they come and torture me, O Lord of Srirangam reclining on a serpent couch!

Periyazhwar makes this submission with a sound knowledge and supreme confidence that Arangan would surely oblige, and finally, in the Phala Sruthi, assures that those who recite this decad of his with purity of heart will become servants of the pure gem-Lord Himself.

***(to be continued…)***


**ஆஸ்திகர்கள் கவனத்திற்கு**

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.




முகவரி மற்றும் விவரங்களுக்கு:
**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004.
போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்:** ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.

ஸ்ரீ:

# Swami Desika – Master of Analogy (3)

## 100 Gems from Srimath Rahasya-thraya Saaram

Smt. Padmalatha Sridharan, Chennai

**Analogical Gems 11 to 15**

11. How the insects inhabiting the body of a lion are carried from one hill to another effortlessly when the lion jumps (Adhikaari Vibhaaga Adhikaaram):

"ஒரு மலையில் நின்றும் ஒரு மலையிலே தாவும் ஸிம்ஹ சரீரத்தில் ஜந்துக்களைப் போலே"

This is an analogy with reference to Acharya Nishtai. Swami Desika declares fervently that there is no doubt about the fruition of Saranagathi done through Acharya Nishtai as it is stated in Sandilya Smruti thus:- ""There could be doubts about the devotees of God attaining their goal but there is absolutely no doubt that the devotees of these devotees (Bhaaghavatha Bhaktas) would definitely get their hearts' desire".

The insects which live in the body of a lion need not make any effort to cross from one a hill to another as they would be carried automatically when the lion jumps. Swami Desika states that this is an example given by Sri Mudhaliaandaan, a nephew of Sri Ramanuja who was of the view that when Sri Ramanuja crossed the sea of Samsara, his direct disciples also traversed the same without much effort.

This holds good for all the Acharyas in our Sampradaya who perform Acharya Nishtai for their disciples.

12. How the silk cloth in which the gem is kept, has to be seen first before the gem can be seen (Upaya Vibhaaga Adhikaaram):

"உள்ளிருக்கிற ரத்நம் காண்கைக்குக் கிழிச்சீரை கண்டாற் போலே"

Swami Desika gives a detailed description of the two Upayas, namely, Bhakthi Yoga and Prapathi in this chapter. Bhakthi Yoga has two components — Karma yoga and Gnana Yoga which lead to the realisation of one's own soul (Atma Saakshaatkaaram) before progressing further.

Karma Yoga is the process of performing one's duties as prescribed in the scriptures as would his birth and status (Varna and Asrama) warrant and specific rituals like thapas, japam, homam, yagnam, etc. without any desire for fruits. These duties and rituals differ from Varna to Varna and Asrama to Asrama and various combinations thereof. For instance, a bachelor Brahmin, a married Brahmin, an ascetic Brahmin, a bachelor Kshathriya, an ascetic Kshathriya… each has a separate set of duties to perform.

Gnana Yoga means continuous meditation of one's own soul with its unique aspects like atomness, oneness, blissfulness, etc. This would lead to the



realisation of one's self which makes him eligible for continuing with the Bhakti Yoga. Self-realisation is a pre-requisite for Bhakti Yoga. It is in this context that Swami Desika gives the example that one has to see the silk cloth in which the gem is kept before the actual gem can be seen.

The Lord resides as Antharyaami in our soul and so the soul has to be experienced first before the Lord can be seen through our mind.

13. How the form of Bhakthi Yoga is similar to the flow of oil (Upaya Vibhaaga Adhikaaram):

"தைல தாரை போலே"

This is a beautiful analogy for Bhakthi Yoga. Bhakthi Yoga means uninterrupted and loving meditation upon the Lord who is Omniscient, Omnipotent and the Ultimate Independent Reality. This uninterrupted meditation upon the Lord's nature, form, attributes etc. is compared to pouring of oil and this has to be practised by the Bhaktha till his last breath.

It is interesting to note that this uninterrupted flow of thought is compared to the flow of oil and not to the flow of water. There is a scientific principle involved here. When you pour water, even though it may seem to be a continuous flow, actually there is the presence of air bubbles which tend to disturb the flow. But oil, when poured, has an undisturbed down flow and hence it is held that the meditation upon Sriman Narayana should be free from disruption by other thoughts.

14. How a thirsty person rejoices upon seeing a pond (Upaya Vibhaaga Adhikaaram):

"பெருவிடாய் பட்டவன் தடாகத்தைக் கண்டாற் போலே"

This analogy is simple and self-explanatory. There are three stages in Bhakti Yoga — Para-bhakthi, Para-gnanam and Parama-bhakthi.

The affectionate meditation as given in the previous analogy is Para-bhakthi and the temporary realisation of the Lord's beautiful form in the mind is Para-gnanam. Once this realisation has been achieved, the Bhaktha rejoices like a thirsty person would upon sighting a pond, his love for the Lord is increased manifold and he longs for the union with the Lord. He is unable to bear subsisting on the earth any longer. This is Parama-bhakti and this would lead to Moksha without much ado.

15. How milk tastes sour for a person with defective bile (Parikara Vibhaaga Adhikaaram):

"பித்த உபஹதனுக்குப் பால் கைக்குமாப் போலே"

Swami Desika takes up two instances from Srimath Ramayana to demonstrate the five components (Angas) needed for Prapathi (Ref. Analogy No. 9). The first one is Thrijata's Saranaagathi to Seetha Piraatti and the second is Vibheeshana's Saranaagathi to Sri Rama.

Vibheeshana advised his brother Ravana to entrust the abducted Seetha Piraatti back to Sri Rama which signified his good intentions. This constitutes Aanukoolya Sankalpam. But the advice irritated Ravana who was obsessed with desire. Just like a person with defective bile cannot appreciate the sweetness of milk, Ravana was blinded by his own evil desire and hence refused to pay heed to the good advice given by his brother. Furthermore, he was enraged and ordered for Vibeeshana to be expelled from his kingdom.

(Swami Desika's apt use of medical parlance is amazing! Is it any wonder that he was blessed with the title ""Sarva Thanthra Swathanthra"?).

*(to be continued…)*


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான
(G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**

4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

ஸ்ரீ:



# *With Pranams:*

**K. Ramana Sundaram,**
F4, Divya Desam,
Maduram Guru Vilas Apartments,
141, Kutchery Road, Myapore, Chennai 600 004.

**SVDD thanks Sri K. Ramana Sundaram**
for sponsoring this month's issue of Desika Sandesam




த்வஜஸ்தம்ப ப்ரோக்ஷணம்





